Follow us:

# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 35 சுபகிருது வருடம், ஆடி மாதம் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (09.08.2022) ஹிஜ்ரி - 1444, முஹர்ரம் - 10 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## லிட்ரோ எரிவாயு விலைக்குறைப்பு





லிட்ரோ சமையல் எரிவாயுவின் புதிய விலைப்பட்டியலை லிட்ரோ நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதன்படி புதிய விலைக் குறைப்புகள் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வருவதாக லிட்ரோ நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

02 பக்கம்

## உணவுப் பொருட்களின் விலை இன்று குறையும்

சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கம் அறிவிப்பு

02 பக்கம்



# வேண்டாம் இடையூறு!

## இந்தியாவை எச்சரிக்கிறது சீனா



நமது விசேட செய்தியாளர்

சீனக் கப்பலின் இலங்கை வருகைக்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்துள்ளமையானது அடிப்படையற்றது எனத் தெரிவித்துள்ள சீனா, இலங்கைக்கும் தமது நாட்டுக்கும் இடையிலான ஒத்துழைப்புகளுக்கு...

02 பக்கம்

## போராட்டத்துக்கு தடையா? மறுத்தது நீதிமன்றம்

யோ.தர்மராஜ்

சிவில் அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் இணைந்து இன்று கொழும்பு விஹாரமகாதேவி பூங்காவில் முன்னெடுக்கவுள்ள எதிர்ப்புப் பேரணிக்கு தடைவிதிக்குமாறு பொலிஸார் முன்வைத்த கோரிக்கையை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் இன்று (09) பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஏற்கனவே போராட்டக்காரர்களால் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், கொழும்பு விஹாரமகாதேவி பூங்காவில் விசேட எதிர்ப்பு...

02 பக்கம்

## 50 புதிய எரிபொருள் நிலையங்களை திறக்கிறது லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம்

50 புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களை திறக்க அனுமதி கிடைத்துள்ளதாக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் கொழும்பு பங்குச் சந்தைக்கு அறிவித்துள்ளது. நாடளாவிய ரீதியில் 50 எரிபொருள் நிரப்பு நிலையங்களை ஆரம்பிப்பதற்கு எரிசக்தி அமைச்சர் ஒப்புதல் அளித்துள்ளதாக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் மனோஜ் குப்தா தெரிவித்துள்ளார்.

## க்ளைபோசேற் இறக்குமதிக்கான தடையை நீக்குவதற்கு நடவடிக்கை

யோ.தர்மராஜ்

நல்லாட்சி அரசாங்க காலத்தில் தடை செய்யப்பட்ட க்ளைபோசேற் இறக்குமதிக்கான தடையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன. அதற்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்றிரவு அரச அச்சகத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததாகவும் அறியமுடிந்தது.

02 பக்கம்

## சாரதி அனுமதிப்பத்திர மருத்துவ பரிசோதனைக் கட்டணம் உயர்வு

சாரதி அனுமதிப்பத்திர விநியோகம் மற்றும் புதுப்பிப்பதற்கான மருத்துவ பரிசோதனை கட்டணம் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலகு ரக அனுமதிப்பத்திரத்துக்கான மருத்துவ பரிசோதனைக்கான கட்டணம் ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

## படையினரின் தன்னிச்சையான நடவடிக்கைகளை ஆட்சேபித்து அடிப்படை உரிமை மனு தாக்கல்

பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் தன்னிச்சையான நடவடிக்கைகளை ஆட்சேபித்து மனித உரிமை ஆர்வலர்கள் இருவர், உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளனர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் மற்றும் காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தின் முன்னாள் ஆணையாளர் மிராக் ரஹீம் ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

02 பக்கம்

## பஸ், வாடகை வாகனங்களுக்கு எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கும்

எரிசக்தி அமைச்சர் காஞ்சன உறுதி



பஸ்கள் மற்றும் முச்சக்கரவண்டி உள்ளிட்ட வாடகை வாகனங்களுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிப்பதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர உறுதியளித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ்கள், முச்சக்கரவண்டி உள்ளிட்ட வாடகை வாகனங்களின் தேவைகளை கண்டறியும் கலந்துரையாடல் நேற்றுக் காலை போக்குவரத்து அமைச்சில் இடம்பெற்றதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

02 பக்கம்

## சிங்கராஜவில் கட்டுமானப்பணிகள் இல்லையென நீதிமன்றில் உறுதி

சிங்கராஜ மழைக்காடுகளை அகற்றி நீர்த்தேக்கங்கள் அல்லது வீதிகள் அமைக்கப்பட மாட்டாது என வனப் பாதுகாப்புத் திணைக்களம் மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று உறுதியளித்துள்ளது.

சிங்கராஜ வனத்தில் உள்ள அரச வன நிலங்களை அகற்றுவது, நீர்த்தேக்கங்கள் மற்றும்...

02 பக்கம்

## ராஜபக்ஷக்களை வைத்து சர்வகட்சி ஆட்சி இயலாது



இன்று ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது அதனைக் கூறுவோம் - சுனில் ஹந்துன்நெத்தி

யோ.தர்மராஜ்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கோட்டாபய ராஜபக்ஷக்களின் ஆட்களைக் கொண்டு அரசாங்கம் ஒன்றை அமைத்துக்கொண்டு சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது...

02 பக்கம்

## கோரிக்கைகளை நிறைவேற்றினால் அரசுக்கான ஆதரவை பரிசீலிப்போம்

சி.வி.விக்னேஸ்வரன் அறிவிப்பு



யோ.தர்மராஜ்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது, அவரை சந்தித்து நாங்கள் முன்வைத்த கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு அதனை நிறைவேற்றுவதாக உறுதியளித்த...

02 பக்கம்

## அரச அடக்குமுறைக்கு எதிராக சர்வமதக் குழுவினர் போராட்டம்

அரச அடக்குமுறைக்கு எதிராகவும், மக்களின் எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமையை பாதுகாக்குமாறும், அவசரகாலச் சட்டத்தை உடனடியாக வாபஸ் பெறுமாறும் வலியுறுத்தி சர்வமதக் குழுவின் ஏற்பாட்டில் மௌனப் போராட்டம் ஒன்று...




படப்பிடிப்பு: கிரிஷான் காரியவசம்

02 பக்கம்

## உஷ்



பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை கைதுசெய்து இராணுவ நீதிமன்று முன்னிலையில் நிறுத்தும் நகர்வொன்று முன்னெடுக்கப்படுகிறதாம்.

அமைதிப் போராட்டங்களின்போது மக்கள் மீது இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தினால் வெளிநாட்டுப் படைகள் வந்து அந்த இராணுவத்தின் மீது தாக்குதல் நடத்துவதில் தப்பில்லையென பொன்சேகா வெளிநாட்டு ஊடகமொன்றிடம் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து இந்த நடவடிக்கையை எடுக்க ஆராயப்படுகிறது. அதன்பின்னர் பீல்ட் மார்ஷல் பட்டத்தை பறிக்கவும் இடமிருக்கிறதாம்.

# எரிபொருள் வரிசைகள் அருகே செல்லும்போது மரணபயம்!

## முன்னாள் ஜனாதிபதி மைத்ரி குமுறல்



யோ.தர்மராஜ்

"நாட்டில் என்ன QR முறைமையை கொண்டுவந்தாலும் இன்றும் எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசைகள் இருப்பதால், வரிசைகளுக்கு அருகில் செல்லும்போது நான் மரணபயத்துடனே செல்கின்றேன். அவ்வாறு செல்லும்போது வாகனத்தை நிறுத்தி, உள்ளே யார் இருக்கின்றார்கள் என்று பார்த்து, நீங்களா இருக்கின்றீர்கள். நீங்களும் 225 பேரில் ஒருவர்தானே. கீழே இறங்குங்கள் எனக் கூறி, என்னையும் கீழே இறக்குவார்கள் என்பது எனக்குத் தெரியும்" என முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மருதானையிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே...

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..

கோட்டாவ வீட்டுக்கு அனுப்பியாச்சுது.. எரிபொருள் பிரச்சினை ஓரளவு ஓகே.. கேஸ் சிலிண்டர் விலை குறைச்சிருக்குது.. இண்டைக்கு ஆர்ப்பாட்டத்துக்கு வாறதா இல்லையாவெண்டு மக்கள யோசிக்க வச்ச அந்தாள் உண்மையில் நரிதான் பாருங்கோ..



# உலக ஹொக்கி விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க இலங்கைக் குழு இலண்டன் பயணம்









(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கையில் உள்ள ஹொக்கி விளையாட்டுக் குழு இலண்டனில் நடைபெறவுள்ள உலக ஹொக்கி விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்வதற்காக 35பேர் கொண்ட குழு இன்று இலண்டன் பயணமாகின்றது. இக்குழுவுக்கு இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகமும், ஸ்ரீலங்கா ஏயார்லைன்ஸ், நிபோன் பெயின்ட் லங்கா நிறுவனங்கள் ஆகியன அனுசரணை வழங்கியுள்ளன.

மேற்படி விடயமாக நேற்று கொள்ளுப்பிட்டியில் உள்ள சுற்றுலா பாடசாலையில் ஊடக மாநாடு இலங்கை ஹொக்கி தேசிய சங்கத்தின் தலைவர் பௌசுல் ஹமீத் தலைமையில் நடைபெற்றது. இவ் ஊடக சந்திப்பில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் தலைவர் ஜலக்கா கஜபாகு ஸ்ரீலங்கா விமான நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றிச்சர்ட் நியுட்டோல், நிபோன் பெயின்ட் லங்கா நிறுவனத்தின் பொது முகாமையாளர் நிமிந்த அபேசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு சுற்றுலாத்துறை தலைவர் கருத்து தெரிவிக்கையில், இலங்கையில் உள்ள விளையாட்டு வீரர்களை வெளிநாடுகளுக்கு அனுசரணை வழங்குவது எமது நாட்டின் சுற்றுலாத்துறையை அவர்கள் செல்லும் நாடுகளில் ஊக்குவித்து அத்துறையை வளர்ப்பதற்காகும். இதேபோன்று, எதிர்காலத்தில் வேறு பல விளையாட்டுப் போட்டிகளுக்கும் எமது அதிகார சபை அனுசரணை வழங்கும் எனத் தெரிவித்தார்.

ஹொக்கி சங்கத்தின் தலைவர் பௌசுல் ஹமீத் தகவல் தருகையில்,

ஒவ்வொரு 02 வருடத் திற்கு ஒரு முறை இப் போட்டி உலக நாடுகள் பங்கு கொண்டு நடைபெறுகின்றன. கடந்த காலத்தில் கொவிட் 19 காரணமாக எமது வீரர்களின் வெளிநாட்டுப் போட்டிகள், தொடர்கள் என்பன இடைப்பட்டன. இவ் வீரர்கள் 35பேர் நாளை 09ஆம் திகதி லண்டன் நோட்டின்கனில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்கின்றனர். இப்போட்டிகள் 12ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. இலண்டனில் வாழும் இலங்கையர் 06 பேரும் இவ் அணியில் இணைந்து கொள்கின்றனர்.

இவ் விளையாட்டுப்போட்டியில் 40 வயதுக்குட்பட்டவர்கள் கொண்ட ஏ அணி இங்கிலாந்து, ஸ்பெயின் கானா, மற்றும் தெற்கு ஆபிரிக்காவுடன் விளையாடும். அத்துடன் ஜேர்மனி, தெற்கு ஆபிரிக்கா, இங்கிலாந்து பிரான்ஸ் ஆகிய 40அணிகள் போட்டியில் மோதுகின்றன.

35 வயதுக்குட்பட்ட இலங்கை அணி ஜேர்மனியுடன் விளையாடும் முதல் போட்டி எதிர்வரும் 12ஆம் திகதி நோட்டிங் வல்வேட் பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இதன்மூலம், இலங்கையில் சுற்றுலாத்துறை மேலும் முன்னேறுவதற்கான ஒரு களமாக இப் போட்டிகள் அமையும். இலங்கை மீளெழுச்சிப்பெற்று வருவதற்கு கிரிக்கெட், காற்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டங்களை நிகழ்த்துவதற்கும் திட்டமிட்டுள்ளது என தெரிவித்தார்.

## போராட்டத்துக்கு தடையா?...

போராட்டங்களை நடத்தவுள்ளதால், அதற்கு தடைவிதிக்குமாறு கறுவாத்தோட்டம் பொலிஸார் முன்வைத்த கோரிக்கையையே இவ்வாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இவ்வாறான போராட்டங்கள் ஊடாக அமைதியை சீர்குலைக்கும் சம்பவங்கள் மற்றும் பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கும் சம்பவங்கள் இடம்பெற்றால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸாருக்கு அதிகாரமுள்ளது என்றும் நீதவான் சுட்டிக்காட்டியுள்ளார்.

## லிட்ரோ எரிவாயு...

அந்தவகையில், 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 246ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 4ஆயிரத்து 664ரூபா.

அத்தோடு, 5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 99 ரூபாவாலும் (புதிய விலை ஆயிரத்து 872 ரூபா), 2.3 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 45 ரூபாவாலும் (புதிய விலை 869 ரூபா) குறைக்கப்பட்டுள்ளது.

## வேண்டாம்...

இடையூறு விளைவிப்பதை இந்தியா நிறுத்த வேண்டும் என கடுந்தொனியில் கூறியுள்ளது.

இலங்கைக்கான வருகையை சீன உளவுக்கப்பல் ஒத்திவைக்க வேண்டும் என இலங்கை அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் சீனா அதிருப்தியில் உள்ளது. இந்நிலையில், கப்பலின் வருகையை தடுக்கும் இந்தியாவின் செயற்பாடு குறித்து சீன வெளியுறவுத்துறை அமைச்சு அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

சீன வெளியுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் வெங் வென்பின் இது குறித்து தனது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான சாதாரண ஒத்துழைப்புகளுக்கு புதுடில்லி தடையாக இருக்கக்கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுவான் வாங் 05 என்ற சீன உளவுக்கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் எதிர்வரும் 11ஆம் திகதிமுதல் 17ஆம் திகதிவரை தரித்து நிற்பதற்கு இலங்கை அரசாங்கம் ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தது.

எனினும், இந்திய அரசாங்கம் இந்தக் கப்பலின் வருகைக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. இந்நிலையில், உளவுக் கப்பலின் வருகையை, சில ஆலோசனைகள் நிறைவேறும் வரை தாமதப்படுத்துமாறு இலங்கையினால் சீனாவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இது குறித்து சீன வெளியுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் வெங் வென்பின் மேலும் கருத்து வெளியிடுகையில், இலங்கை அரசாங்கத்தின் அறிக்கையை நாம் அவதானித்தோம். இரு விடயங்களை நாங்கள் வலியுறுத்திச்சொல்ல விரும்புகிறோம். இலங்கை, இந்திய பெருங்கடலின் பிரதான போக்குவரத்து மையமாக இருக்கிறது. சீனாவின் விஞ்ஞான ஆய்வுக் கப்பல்கள் உள்ளிட்ட ஏராளமான கப்பல்கள் விநியோகங்களுக்காக அங்கு தரித்து நிறுத்தப்பட்டுள்ளன. சீனா எப்போதும் உயர் கடல்களில் வழிசெல்வதற்கான சுதந்திரத்தைப் பயன்படுத்துவதுடன் கடலோரங்கள் உரிமையுடைய அரசாங்கங்களின் அதிகார வரம்பை முழுமையாக மதிக்கிறது என்றார்.

“இலங்கை இறையாண்மையுடைய ஒரு நாடாகும். அந்த அரசாங்கத்தின் சுய அபிவிருத்தி மற்றும் விருப்பத்துக்கு அமைய ஏனைய நாடுகளுடன் உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான ஒத்துழைப்பானது சுயமாக தெரிவு செய்யப்பட்டதேயன்றி மூன்றாவது தரப்பை குறிவைக்கவில்லை.

பாதுகாப்பு காரணங்களுக்காக இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகிப்பதானது அடிப்படையற்றதாகும்.

சீனாவின் அறிவியல் ஆய்வுகளை நியாயமான மற்றும் விவேகமான முறையில் பார்க்க வேண்டும். அதனைவிடுத்து சீன - இலங்கை நாடுகளுக்கிடையிலான பரிமாற்றங்கள், ஒத்துழைப்புகளுக்கு இடையூறு செய்வது நிறுத்தப்பட வேண்டும்” என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பஸ், வாடகை...

இந்த சந்திப்பின்போது, போக்குவரத்து ஆணைக்குழுவின்மூலம் ஒவ்வொரு வாகன வகைக்கும் எரிபொருள் தேவைகளை அடையாளம் காண தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

தேவைகள் கிடைத்தவுடன் அமைச்சு அடுத்த வாரத்திற்குள் தனி QR குறியீட்டில் கூடுதல் ஒதுக்கீடுகளை ஒதுக்கும் என்று எரிசக்தி அமைச்சர் குறிப்பிட்டார்.

மாற்றங்கள் செய்யப்படும்வரை 107 இ.போ.ச. டிப்போக்களில் இருந்து தனியார் பஸ்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் என்றும் அவர் கூறினார்.

இந்த வாரமும் வாடகை வாகனங்கள் நிலையான ஒதுக்கீட்டைப் பெறும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

## சாரதி அனுமதிப்பத்திர...

அத்துடன், கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு சிறுநீர் பரிசோதனை தவிர்ந்த மருத்துவ பரிசோதனை அறிக்கை கட்டணம் ஆயிரத்து 500 ரூபாவாக திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் தேசிய வைத்திய போக்குவரத்து நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

மருத்துவ பரிசோதனைகளுக்காக பயன்படுத்தப்படும், பொருட்கள் மற்றும் உபகரணங்களின் விலை அதிகரிப்பு காரணமாக இவ்வாறு கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தேசிய வைத்திய போக்குவரத்து நிறுவனம் தெரிவித்துள்ளது.

## எரிபொருள் வரிசைகள்...

அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்லுள்ள மோசமான நெருக்கடியிலிருந்து மக்களை மீட்பதற்கு அரசாங்கம் எடுக்கும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நாங்கள் ஆதரவு வழங்குவதாக கொள்கை அடிப்படையில் தீர்மானம் எடுத்துள்ளோம். ஜனாதிபதி கறுப்பா, வெள்ளையா? என்பதற்கு அப்பால், தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி சுதந்திரமாக செயற்படுவதற்கு சிறிது காலஅவகாசம் கொடுக்க வேண்டும்.

எனினும், போராட்டத்திலுள்ளவர்களுக்கு தண்டனை கொடுப்பதற்கு முயற்சித்தால் அவற்றுக்கு நாங்கள் ஆதரவளிக்க முடியாது. போராட்டத்தால் இந்த நாட்டில் புரட்சியொன்று ஏற்பட்டது. புரட்சி என்பது வேறு. யுத்தம் என்பது வேறு. போராட்டம் நடத்தியவர்கள் இறுதியில் ஜனாதிபதி மாளிகை, அலரிமாளிகை மற்றும் பிரதமரின் வீட்டையும் கைப்பற்றி தீ வைத்தனர்.

அதேபோன்று, தாடி வளர்த்த போராட்டக்காரர் ஒருவர் ரூபவாஹினியை கைப்பற்றி, செய்தி கூறுவதற்கு ஆரம்பித்தார். குறிப்பாக, தற்போது தொடக்கம் போராட்டம் தொடர்பான செய்திகள் மாத்திரமே ரூபவாஹினியில் ஒளிபரப்பு செய்ய வேண்டும் என்றார். அவரே இறுதியில் விமானத்திலிருந்து கைது செய்யப்பட்டார்.

எனவே, இந்த புரட்சி அமைதியாக, ஒழுக்கமாக முன்னெடுக்கப்பட்டு வந்தது போன்று, இறுதியில் மோசமான நிலைமைக்கு மாற்றமடைந்தது. எனினும், போராட்டக்காரர்கள் நாட்டை கைப்பற்றியதால் பல தலைவர்கள் தப்பியோடினர்.

அவ்வாறு இவர்கள் நாட்டை கைப்பற்றியவர் செய்திகளை வாசித்ததற்கு பதிலாக, போராட்டத்தை ஏற்பாடு செய்த தலைவர் ரூபவாஹினிக்குச் சென்று, அந்தத் தலைவர் நானாக இருந்தால், தற்போது நாங்கள் நாட்டை கைப்பற்றிவிட்டோம். இனி நாங்கள் நல்லதொரு நாட்டை உருவாக்க வேண்டும். எனவே, நீங்கள் அனைவரும் அமைதியாக செயற்படுவதோடு, அனைவரும் ஒத்துழைப்பு வழங்குங்கள் எனக் கோரியிருப்பேன். இதனையே போராட்டத்தை ஏற்பாடு செய்த தலைவர் செய்திருக்க வேண்டும்.

எனினும், போராட்டத்தில் இறுதியில் எந்தவொரு தலைவரும் இருக்கவில்லை. போராட்டம் ஆரம்பித்தபோது நாங்களும் ஆதரவளித்தோம். ஆனால், ஜனாதிபதி மாளிகையை கைப்பற்றி அங்குள்ள பொருட்களை சேதமாக்கியதுடன், பொருட்களையும் எடுத்துச் செல்லும்போது நாங்கள் அதனை ஆதரவளிக்காது, ஆச்சரியமாக பார்த்துக்கொண்டிருந்தோம்.

நான் ஓய்வுபெற்றுச் சென்றபோது எனக்கு இரண்டு மூன்று வாகனங்கள் வழங்கப்பட்டன. இதில் ரேன்ஞ்ரோ ஒன்றும் இருந்தது. எனினும், பெற்றோல் விலை அதிகரிக்கப்பட்டதையடுத்து அதனை ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைந்திருந்தேன். ஆனால், போராட்டக்காரர்கள் அவ்வாறான பெறுமதியான வாகனங்கள் போன்றவற்றுக்கு பாரிய சேதங்களை ஏற்படுத்தியுள்ளனர். உண்மையான புரட்சியாளர்கள் என்றால், அதிசொகுசு வாகனங்களை யாருக்கேனும் விற்பனை செய்துவிட்டு, அந்த பணத்தை திறைசேரிக்கு வழங்குவார்கள்.

இதேவேளை, தற்போதும் எரிபொருள் நிலையங்களில் வரிசைகள் காணப்படுகின்றன. வரிசைகளுக்கு அருகில் செல்லும்போது நான் மரண பயத்துடனேயே செல்கின்றேன். அவ்வாறு செல்லும்போது வாகனத்தை நிறுத்தி, உள்ளே யார் இருக்கின்றார்கள் என்று பார்த்து, நீங்களா இருக்கின்றீர்கள். நீங்களும் 225பேரில் ஒருவர் தானே. கீழே இறங்குங்கள் எனக்கூறி, என்னையும் கீழே இறக்குவார்கள் என்பது எனக்கு தெரியும்.

என்ன QR முறையை கொண்டுவந்தாலும் இன்றும் வரிசைகள் இருக்கின்றன.

எனவே, இந்த நிலைமையிலிருந்து நாட்டை மீட்பதாயின் அதற்கு பொருளாதார பிரச்சினையை தீர்க்க வேண்டும். இதற்காக, நாங்கள் அரசுக்கு ஆதரவளித்தாலும் ஏற்றுக்கொள்ள முடியாத சில விடயங்களும் இருக்கின்றன – என்றார்.

## க்ளைபோசேற்...

க்ளைபோசேற் உரத்தினால் புற்றுநோய், சிறுநீரக நோய் உள்ளிட்ட உடலுக்கு ஆபத்தான விளைவுகள் ஏற்படுவதாகக் கூறி அத்துரலிய ரத்ன தேரர் உள்ளிட்ட தரப்பினர் க்ளைபோசேற் இறக்குமதிக்கு தடை விதிக்குமாறு அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, க்ளைபோசேற் உர இறக்குமதியை தடை செய்யுமாறு, கடந்த 2015 ஜூலை 11ஆம் திகதி நிதி அமைச்சினால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது.

இதற்கமைய, 2015 ஒக்டோபர் 23ஆம் திகதி முதல் இலங்கையில் முற்றாக தடை செய்யப்பட்டது. எனினும், இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டதால், தேயிலை மற்றும் இறப்பர் விளைச்சல்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டதால், அவற்றுக்கு மாத்திரம் க்ளைபோசேற் உரத்தை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குவதற்கு, சுகாதார, விவசாயம் மற்றும் பெருந்தோட்டத்துறையை பிரதிநிதித்துவப்படுத்தி நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் தீர்மானத்துக்கு அமைய, கடந்த 2018 ஜூலை 11ஆம் திகதி தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்திக்கு மாத்திரம் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

எனினும், க்ளைபோசேற் தடையை முற்றாக நீக்குவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் உள்ளக தகவல்கள் தெரிவித்தன.

## கோரிக்கைகளை...

பின்னரே அவருக்கு நான் வாக்களித்தேன். தற்போது அதனை நிறைவேற்றுவதற்கு இணங்கினால் அரசாங்கத்தில் இணைவது குறித்து ஆராய்வோம் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தைக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் பல யோசனைகளை முன்வைத்துள்ளோம். அதனை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுவதற்கு இணக்கம் தெரிவித்தால் சர்வக்கட்சி அரசாங்கத்தில் இணைவது குறித்து ஆராய்வோம். அதன்படி, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது உள்ளிட்ட பல முக்கிய கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரதமராக இருந்தபோது, அவரை சந்தித்து நாங்கள் முன்வைத்த கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு அதனை நிறைவேற்றுவதாக உறுதியளித்த பின்னரே அவருக்கு நான் வாக்களித்தேன். இந்த நிலையில் தற்போது அதனை தருமாறு கோருவோம். அவரால் செய்யக்கூடியவற்றையே கோரியுள்ளோம் - என்றார்.

## அரச அடக்குமுறைக்கு...

நேற்று (08) கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நடைபெற்றது.

அங்கு இந்து, கத்தோலிக்க, பௌத்த மத குருக்கள் உள்ளிட்டவர்கள் பல்வேறு பதாகைகளை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## படையினரின் தன்னிச்சையான...

அரசியலமைப்பு சட்டத்தின் ஆட்சி மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் விதிமுறைகளுக்கு மாறாக பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், அவர்களை தற்காலிகமாக இரகசிய காவலில் வைத்திருப்பதற்கான நிர்வாக நடைமுறையின் சட்டபூர்வ தன்மையை மனுதாரர்கள் சவாலுக்கு உட்படுத்தியுள்ளார்கள்.

பொலிஸ் மா அதிபர், நீதி அமைச்சர், பொது பாதுகாப்பு அமைச்சர், இராணுவத் தளபதி, வான் படைத் தளபதி, கடற்படைத் தளபதி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தமது அடையாளத்தை காட்டாத, பொலிஸாருக்கு சொந்தமானது என அடையாளம் காணப்படாத வாகனங்களில் போராட்டக்காரர்கள் அழைத்துச் செல்லப்படுவதுடன் சில நேரங்களில் நீதிவான் ஒருவர் முன், முன்னிலைப்படுத்தப்படாமல் பல மணி நேரம் அடையாளம் தெரியாத இடங்களில் போராட்டக்காரர்கள் தடுத்து வைக்கப்படுவதாகவும் மனுதாரர்கள் கூறியுள்ளனர்.

## சிங்கராஜவில்...

வீதிகள் அமைக்கும் பணியை நிறுத்த உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சுற்றாடல் நீதிக்கான மத்திய நிலையத்தினால் (CEJ) தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு நீதியரசர்கள் சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கனேபொல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வனப் பாதுகாப்புத்துறை சார்பில் ஆஜரான சிரேஷ்ட அரச வழக்கறிஞர், வீதிகள் மற்றும் நீர்த்தேக்கங்கள் கட்டுவதற்கு முன்மொழியப்பட்ட எந்தவொரு திட்டத்திற்கும் சிங்கராஜா மழைக்காடுகள் தீண்டப்படாமல் இருக்கும் என நீதிமன்றத்தில் உறுதியளித்தார்.

இம்மனு எதிர்வரும் செப்டெம்பர் 8ஆம் திகதி மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

## உணவுப் பொருட்களின்...

உணவுப் பொருட்களின் விலை இன்று குறைக்கப்படும் என சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத், எரிவாயுவின் விலையை குறைக்க லிட்ரோ எரிவாயு நிறுவனம் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டமை, பொருட்கள், மரக்கறிகள் மற்றும் பிற பொருட்களின் விலை குறைப்பு காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நேற்று விலையில் திருத்தம் செய்யப்பட இருந்தபோதிலும், கடந்த வாரம் லிட்ரோ எரிவாயு நிறுவனம் தனது விலை குறைப்பை அறிவிக்கத் தவறியதால், இன்று அனைத்து உணவுப் பொருட்களின் விலைகளையும் குறைக்கவுள்ளதாக அவர் கூறினார்.

எரிவாயுவின் விலை 200ரூபாவிற்கும் அதிகமாக குறைக்கப்படும் என நம்புவதாக அசேல சம்பத் தெரிவித்தார்.

புறக்கோட்டை சந்தையில் காய்கறிகளின் மொத்த விற்பனை விலைகள் கணிசமாக குறைந்துள்ளபோதிலும், மற்ற நகரங்களில் அல்லது கிராமப்புறங்களில் பொருட்களின் விலை குறைக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

விலை அதிகரிப்பு காரணமாக மக்கள் உணவைத் தவிர்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அசேல சம்பத் வலியுறுத்தியுள்ளார்.

எனவே பல்வேறு பிரச்சினைகள் இருந்தபோதிலும், சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் உணவுப் பொதி மற்றும் சாதாரண தேநீர் ஆகியவற்றின் விலைகளை குறைக்க முடிவு செய்துள்ளதாக அவர் கூறினார்.

மதிய உணவு, கொத்து மற்றும் ஏனைய உணவுப் பொருட்களின் விலைகளை ஒழுங்குபடுத்துமாறு அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு விலை நிலையாக இருக்க வேண்டும் என்றார்.

பண்டங்களின் விலை அதிகரிப்பு மற்றும் கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள சிற்றுண்டிச்சாலை தொழிற்துறைக்கு அரசாங்கம் சலுகைகளை வழங்குமாறும் அசேல சம்பத் வலியுறுத்தியுள்ளார்.

## ராஜபக்ஷக்களை வைத்து...

குறித்து ஏனைய கட்சிகளை அழைத்து பேசுவதில் எவ்வித பயனுமில்லை. எனவே, இந்த சர்வகட்சி அரசாங்கத்தில் இணையமாட்டோம். அதனைக் கூறுவதற்காக நாங்கள் ஜனாதிபதியை சந்திக்கின்றோம் என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று (08) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது குறித்து ஏனைய கட்சிகளை சந்திப்பதைப் போன்றே எங்களுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். அதன்படி, நாளை (இன்று) ஜனாதிபதியை சந்திக்கவுள்ளோம். சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவதற்கு எவ்வித தீர்மானமும் இல்லை என்பதை இதற்கு முன்னரும் நாங்கள் அறிவித்துள்ளோம். அதே நிலைப்பாட்டையே ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது தெளிவாக எடுத்துரைக்கவுள்ளோம்.

குறிப்பாக, தற்போதும் ஜனாதிபதியினால் அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டதன் பின்னர் சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது குறித்து பேசுவதில் எவ்விதப் பயனுமில்லை.

ரணில் விக்ரமசிங்க என்பவர், ரணில் ராஜபக்ஷவாகிய பின்னர் அவருடைய இடைக்கால பேச்சுகள் என அனைத்தும் இல்லாதுபோயுள்ளன. இந்த நிலையில், தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான பின்னணியை உருவாக்குவதற்காக சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதாயின் நாங்களும் அதற்கு ஆதரவளிக்க முடியும்.

ஆனால், தற்போது, ரணில் விக்ரமசிங்கவின் பலத்தை அதிகரித்துக்கொள்ளவும் கடனை பெற்றுக்கொள்வதற்காக அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு, சர்வதேசத்திற்கு மத்தியில் எங்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்கே தற்போது சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கோட்டாபய ராஜபக்ஷக்களின் ஆட்களைக்கொண்டு அரசாங்கம் ஒன்றை அமைத்துக்கொண்டு, ஏனைய கட்சிகளை அழைத்து பேசுவதில் எவ்விதப் பயனுமில்லை. இது சர்வகட்சி அரசாங்கமாக இருக்காது. இது மக்களாணையை பெற்றுக்கொள்வதற்கான இடைக்கால அரசாங்கமல்ல. எனவே, இந்த சர்வகட்சி அரசாங்கத்தில் இணையமாட்டோம். அதனைக் கூறுவதற்கும் நாங்கள் ஜனாதிபதியை சந்திக்க வேண்டியுள்ளது – என்றார்.




அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராக கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக மதத் தலைவர்களால் நேற்று (08) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.
(படப்பிடிப்பு: கிரிஷான் காரியவசம்)

# நான்கு மாதங்களில் 1,024பேர் படகினூடாக சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சி

(ஹேமந்த லியணபத்திரன)

நாட்டில் ஏப்ரல் மாதம் முதல் கடந்த நான்கு மாதங்களில் படகுகளினூடாக சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு செல்ல முயற்சித்த ஆயிரத்து 24பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர். அதற்கமைய, கடந்த நான்கு மாதங்களில் 15படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் கடற்படை தெரிவித்தது.



இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது, இவ்வாறு சட்டவிரோதமாக படகுகளினூடாக வெளிநாடு செல்ல முயற்சித்து ஆயிரத்து 24 பேரில், 911 பேர் அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயற்சித்திருந்ததாகவும், இந்தியாவுக்கு செல்ல முயற்சித்த 113 பேரும் அடங்குகின்றனர். இவர்களின் பெரும்பாலானவர்கள் தமிழ் மக்கள் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடற்படையினரின் கண்காணிப்பு நடவடிக்கைகளையும் மீறி மேலும் ஆறு படகுகள் அவுஸ்திரேலியாவுக்கு சென்றுள்ளன.

இதேவேளை, சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா சென்ற 183பேர் அவுஸ்திரேலிய கரையோர பாதுகாப்பு படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர் மீண்டும் விமானத்தினூடாக நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் 06ஆம் திகதி அவுஸ்திரேலியாவை நோக்கி படகினூடாக 43பேர் சென்றுள்ளதுடன் கடந்த 21ஆம் திகதி அவர்கள் அவுஸ்திரேலிய அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் அவுஸ்திரேலிய கரையோர பாதுகாப்பு பிரிவு அதிகாரிகளினால் கப்பலினூடாக அழைத்து வரப்பட்டு இலங்கை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.










அரச அடக்குமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்து அதிபர் தொழிற்சங்கத்தினர் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்துக்கருகில் நேற்று (08) ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலினும் குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தார். (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

## ரூபாவின் பெறுமதி சற்று குறைந்தது

நாட்டில் கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில், அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி சற்று அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அமெரிக்க டொலரின் விற்பனை விலை கடந்த வெள்ளிக்கிழமை ரூ.368.51ஆக இருந்ததுடன் நேற்றையதினம் ரூ.368.46ஆகக் குறைந்துள்ளது.

## ஐக்கிய மக்கள் சக்தியின் கெஸ்பேவ அமைப்பாளர் கைது

நாட்டில் கடந்த மே மாதம் 09ஆம் திகதி இடம்பெற்ற 06கலவரச் சம்பவங்களுக்கு முயற்சி எடுத்தவர் என்ற சந்தேகத்தின் பேரில், ஐக்கிய மக்கள் சக்தியின் கெஸ்பேவ தொகுதி அமைப்பாளர் கயான் டி மெல் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிலியந்தலை பொலிஸார் விடுத்த அறிவித்தலின் பிரகாரம், சந்தேகநபர் நேற்றுக் காலை சட்டத்தரணி ஊடாக பொலிஸில் சரணடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்பின்னர், பொலிஸார் சந்தேக நபரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நிர்வாக சேவை சங்கத்தின் வடமாகாணக் கிளையினர் முல்லைத்தீவில் சுகயீன விடுமுறைப் போராட்டம்







(வன்னி செய்தியாளர்)

இலங்கை நிர்வாக சேவை சங்கத்தின் வடமாகாணக் கிளையினர் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நேற்று சுகயீன விடுமுறைப் போராட்டமொன்றில் ஈடுபட்டனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியமையைக் கண்டித்தும், புதுக்குடியிருப்பு பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியுமே குறித்த போராட்டம் இடம்பெற்றது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில்,

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, பிரதேச செயலாளரும், இலங்கை நிர்வாக சேவை தரம் 1ஐச் சேர்ந்தவருமான சி.ஜெயக்கந்தனின் பணிமனையும், உத்தியோகபூர்வ விடுதியும் கடந்த ஜூலை 30ஆம் திகதி சனிக்கிழமையன்று மாலை 6.30தொடக்கம் நள்ளிரவு 12.00மணிவரையான காலப்பகுதியில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டு சோதனை செய்யப்பட்டது.

குறித்த தேடுதலின்போது, குறிப்பிட்டளவு எரிபொருட்கள் அங்கிருந்து மீட்கப்பட்டதுடன், அவ்வாறு மீட்கப்பட்ட எரிபொருட்களை புதுக்குடியிருப்பு பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.பி.ஆர். ஹேரத்தால் எடுத்தும் செல்லப்பட்டிருந்தது.

இந்நிலையில், முறையான தேடுதல் அனுமதியின்றி பொலிஸாரால் தேடுதல் மேற்கொள்ளப்பட்டு அங்கு சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், தேடுதலின்போது அலுவலகத் தேவைக்காக வைக்கப்பட்டிருந்த எரிபொருட்களை எவருடைய அனுமதியுமின்றி புதுக்குடியிருப்பு பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி எடுத்துச் சென்றதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அத்தோடு, புதுக்குடியிருப்பு பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.பி.ஆர். ஹேரத் இற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் இவ்வார்ப்பாட்டத்தில் இலங்கை நிர்வாகசேவை சங்கத்தின் வடமாகாணக் கிளையினர் வலியுறுத்தியிருந்தனர்.

மேலும், ஆர்ப்பாட்டத்தினைத் தொடர்ந்து இலங்கை நிர்வாகசேவைகள் சங்கத்தின் வடமாகாணக் கிளையினர் ஊடகசந்திப்பு ஒன்றினை நடத்தியதுடன், இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி வடமாகாண பிரதம செயலாளர், பொலிஸ்மா அதிபர், தேசிய பொலிஸ் ஆணைக்குழு, மாவட்ட செயலாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளிட்டவர்களுக்கான மகஜர்கள், முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஜோசப் ஸ்டாலின் பிணையில் விடுதலை



குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் நேற்று (08) பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அவரை பிணையில் விடுதலை செய்யுமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பில் கடந்த மே மாதம் 28ஆம் திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, நீதிமன்ற உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டிருந்தார். இந்நிலையில், அவர் உள்ளிட்ட தொழிற்சங்க பிரமுகர்கள் மற்றும் போராட்டக்காரர்கள் கைதுசெய்யப்பட்டமைக்கு எதிராக பல்வேறு பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில், ஜோசப் ஸ்டாலின் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

## சாவகச்சேரி விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

(சாவகச்சேரி செய்தியாளர்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுணாவில் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 10மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் பலியாகியிருப்பதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சாவகச்சேரி நகர் பகுதியிலிருந்து நுணாவில் நோக்கி ஏ9வீதி ஊடாக துவிச்சக்கரவண்டியில் பயணித்த இளைஞர்களை அதே திசையில் பின்னால் வந்த ஹயஸ் வாகனம் மோதிவிட்டு தப்பித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் மறவன்புலோ பகுதியைச் சேர்ந்த 26வயதான க. நிசாந்தன் என்பவர் விபத்தில் சிக்கி பலியானதுடன் அவருடன் பயணித்த மட்டுவில் தெற்கு பகுதியைச் சேர்ந்த 29வயதான தி.பார்த்தீபன் என்ற இளைஞன் படுகாயமடைந்த நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பதினொரு சைக்கிள்களை திருடியவர் ஹிக்கடுவையில் பொலிஸாரால் கைது

ஹிக்கடுவை, நாரிகம பிரதேசத்தில் 11 துவிச்சக்கர வண்டிகளைத் திருடிய சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் காலி, போகஹவத்த, படாதுவ பிரதேசத்தைச் சேர்ந்தவராவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர் போதைப்பொருளுக்கு அதிகளவில் அடிமையாகியிருப்பது பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. சந்தேகநபர், பொலிஸ் விசாரணையின் போது, காலி பகுதியில் 05, அக்மீமன பிரதேசத்தில் 04, காலி துறைமுக பொலிஸ் பிரிவு மற்றும் கோனாபினுவல பிரதேசத்தில் தலா ஒரு துவிச்சக்கரவண்டியையும் திருடியுள்ளமை தெரியவந்துள்ளது.

இவ்வாறு திருடப்பட்ட துவிச்சக்கரவண்டிகள் பூஸா, கதுருபே பிரதேசத்தில் பல்வேறு நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன், அந்தத் துவிச்சக்கரவண்டிகளும் ஹிக்கடுவை பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் நடைபெறும் ஏல விற்பனை

**செலான் வங்கி (பி.எல்.சி.) – பொத்துவில் கிளை**
**பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏல விற்பனை**

பொத்துவில்-11 இல் வசிக்கும் தீபால் நிரோஸ் சதாநந்த (வேறு பெயர் தீபால் நிரோஷ் சதானந்த) என்பவர் "கடப்பாடுடையவர்/ ஈடுவைத்தவர்" என்ற வகையில் தவணை தவறியுள்ளதால், பிரசித்த நொத்தாரிசு ஆ.மு.பெரிநாபராஜா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனைத்துமான 2013.03.13 ஆம் திகதியிடப்பட்ட 1742 ஆம் இலக்க ஈட்டு முறி, 2013.09.18 ஆம் திகதியிடப்பட்ட 2051 ஆம் இலக்க ஈட்டு முறி, 2015.06.26 ஆம் திகதியிடப்பட்ட 2865 ஆம் இலக்க ஈட்டு முறி, 2015.09.15 ஆம் திகதியிடப்பட்ட 2914 ஆம் இலக்க ஈட்டு முறி, 2016.06.28 ஆம் திகதியிடப்பட்ட 3115 ஆம் இலக்க ஈட்டு முறி ஆகியவை மூலம் செலான் வங்கி பி.எல்.சியில் அடகு வைக்கப்பட்ட வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால், இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் அதன் சுற்றுச்சூழலானது

**2022 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 05 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு செலான் வங்கி பி.எல்.சியினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு செலான் வங்கி பி.எல்.சி. இல 90, காலி வீதி, கொழும்பு-03 இல் உள்ள கிளை வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.**

இந்த ஏல விற்பனையானது சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கொவிட்-19 நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்கான கண்டிப்பான வழிகாட்டுதலுக்கேற்ப நடத்தப்படும்.

**அட்டவணை**

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், பொத்துவில் பானமபத்து பிரதேச செயலாளர் அலுவலகப் பிரிவிற்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிற்குள், பி/03 கிராமசேவகர் பிரிவிற்குள், பொத்துவில் 03 இல் உள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் சி.ஈ.பிலிப்ஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1952.09.15 ஆம் திகதி 805 ஆம் இலக்க அளவீட்டுத் திட்டத்தின்படி "பாக்கியவன்ன அல்லது மவுலானா தோட்டம்" என அழைக்கப்படும் விசாலமான காணியின் அளவானது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி 104 அடி கிழக்கிலிருந்து மேற்காக 52 அடி (வ-தெ 104, அடி கி-மே 52 அடி) விசாலமான காணித்துண்டு

உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ்.எம்.காசிம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011.07.01 ஆம் திகதி 5630 ஆம் இலக்க அளவீட்டுத் திட்டத்தின்படி

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், பொத்துவில் பானமபத்து பிரதேச செயலாளர் அலுவலக பிரிவிற்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிற்குள் பி/03 கிராம சேவகர் பிரிவிற்குள், பொத்துவில் 03 இல் "பாக்கியவன்ன அல்லது மவுலானா தோட்டம்" என் அழைக்கப்படும் விசாலமான காணியின் அளவானது இருபத்து மூன்று தசம் ஒன்று ஒன்று பேர்ச்சஸ் (பே 23.11) (0.0585 ஹெக்டேயர்) விசாலமான காணித்துண்டு

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி**:வங்கி வளாகத்திலிருந்து அக்கரைப்பற்றை நோக்கி 200 மீற்றர் தூரத்தில் இடது பக்கமுள்ள வட்டிவெலி வீதி வரை சென்று, பிறகு அந்த வட்டிவெலி வீதியில் 300 மீற்றர் சென்று, பிறகு இவ்விடயத்திற்கான காணி இடது பக்கம் அமைந்துள்ளது.

தீர்மான முடிவு அறிவித்தல்கள்

2022.06.17 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானியிலும், 2022.06.29 ஆம் திகதி டெய்லி FT, அத மற்றும் தமிழன் ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்:** உத்தேச கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்.

1)கொள்வனவு விலையின் 10% 2) உள்ளூராட்சி மன்ற வரி 1%
3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% 4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2500/= 5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம்
6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பர செலவுகள்

கொள்முதல் விலையின் 90 வீதத்தையும், மிகுதி இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பி.எல்.சி. தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப்பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும், அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க்குறிப்பிட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும்: பிரதான முகாமையாளர், (சட்டம்) செலான் வங்கி பி.எல்.சி. இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு-03. தொலைபேசி இலக்கங்கள் 0112456494, 0112456479

மேற்படி ஏலவிற்பனையை எதுவித முன்னறிவித்தலுமின்றி நிறுத்துவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ உரிய அதிகாரங்களும் வங்கிக்குண்டு.

சந்திமா பிரியதாஷனி கமகே,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர்
மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9–i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்த, பனாகொட, ஹோமாகம.
தொலைபேசி இலக்கம்: 0714318252, 011– 2173282

Ruveda™
மூலிகை
அழகுசாதன கிரீம்

இலங்கையிலுள்ள சகலருக்கும் ஏற்றவாறு தயாரிக்கப்பட்டுள்ளது
சருமம் நிறம் மங்குதல் மற்றும் மடிப்பு ஏற்படுவதை தடுக்கும்
சருமத்தை சூரிய ஒளியில் இருந்தும் தூசியில் இருந்தும் பாதுகாக்கும்
பொலிவான சருமத்தினை தந்திடும்




சேர்மானங்கள், பிளீச் மற்றும் பாதிக்கும் ரசாயனங்கள் அற்றது

இலங்கைக்குள் சீனாவின் இராணுவக்கப்பல் வருமா வராதா என்ற சர்ச்சை ஒருபுறம் ஓடிக்கொண்டிருக்க, மறுபக்கம் தாய்வானை அண்டிய கடலில் இராணுவப் பயிற்சிகளை செய்வதால் போர்ப்பதற்றம் தோன்றியிருக்கிறது.

தனது நாட்டின் ஒருங்கிணைந்த பகுதி என சீனா உரிமை கொண்டாடிவரும் தாய்வான் தீவுக்கு அமெரிக்க நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபை தலைவர் நான்சி பெலோசி வருகை தந்தமை தாய்வான் நீரிணையில் போர்ப் பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அமெரிக்காவின் உயர்நிலை தலைவர்களில் ஒருவரான பெலோசியின் தாய்வான் பயணம் சீனாவை அதிர்ச்சியடைய வைக்கும் என்று தெரிந்தேதான் நான்சி பெலோசி பயணம் மேற்கொண்டார் என்பதில் சந்தேகமில்லை. வேண்டுமென வம்புக்கு இழுக்கும் அமெரிக்கா இப்படி நடந்துகொண்டதில் ஆச்சரியமில்லை.

இந்தப் பயணத்தை 'மிகவும் ஆபத்தானது' என சீனா கண்டித்திருப்பதிலிருந்தும், அதைத் தொடர்ந்து தாய்வானைச் சுற்றி பிரமாண்டமான அளவில் போர்ப்பயிற்சி மேற்கொண்டு வருவதிலிருந்தும் சீனாவின் கோபத்தை தெரிந்து கொள்ளலாம். நான்சி பெலோசி விஜயத்தைத் தொடர்ந்து அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டிருக்கிறது.

தென்கிழக்கு சீனாவிலிருந்து சுமார் 100மைல் தொலைவில் அமைந்துள்ள தீவு தாய்வான். 17ஆம் நூற்றாண்டில் குயிங் வம்சத்தினர் ஆட்சியின்போது சீனாவின் முழுக் கட்டுப்பாட்டில்தான் தாய்வான் இருந்ததாக வரலாற்று ஆதாரங்கள் தெரிவிக்கின்றன.

முதல் சீன - ஜப்பான் போரில் தோல்வியடைந்த பின்னர், தாய்வானை குயிங் வம்ச ஆட்சியாளர்கள் ஜப்பான் கட்டுப்பாட்டில் 1895இல் கொடுத்துவிட்டனர். இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் தோல்வியுற்றதைத் தொடர்ந்து, 1945இல் மீண்டும் சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் சென்றது தாய்வான்.

பின்னர், சீனாவில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரில் மாவோ தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி வெற்றிபெற்றதையடுத்து, 1949இல் சீனாவும் தாய்வானும் மீண்டும் பிரிந்தன. கம்யூனிஸ்ட் கட்சியினரால் தோற்கடிக்கப்பட்ட தேசியவாதக் கட்சியில் எஞ்சிய குவாமின்டாங் கட்சியின் தலைவர் சியாங் கய்ஷெக் சீனாவிலிருந்து வெளியேறி தாய்வானுக்குச்சென்று பல ஆண்டுகள் தாய்வானை ஆண்டார்.

இந்த வரலாற்று ஆதாரத்தின்மூலம் தாய்வான் தனது நாட்டின் ஒருங்கிணைந்த பகுதி என சீனா கூறி வருகிறது. இதே வரலாற்று ஆதாரத்தை வைத்து நவீன சீனாவின் அதாவது மாவோ தலைமையில் சீன மக்கள் குடியரசு நிறுவப்பட்ட பின்னர் சீனாவின் ஒரு பகுதியாக தாங்கள் இருக்கவில்லை என தாய்வான் வாதிட்டு வருகிறது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஓகஸ்ட் 09ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# மேற்குலகமும் சீனாவும்!

தாய்வானை தனி நாடாக இதுவரை 13 நாடுகளே அங்கீகரித்துள்ளன. அமெரிக்காவைப் பொறுத்தவரை ஒரே சீனா என சீனாவைத்தான் அங்கீகரிக்கிறதே தவிர தாய்வானை அங்கீகரிக்கவில்லை. ஆனால், 1979இல் ஏற்படுத்தப்பட்ட தாய்வான் உறவுகள் சட்டத்தின் மூலம் தாய்வானுடன் அமெரிக்கா தொடர்பு கொண்டுள்ளது. இந்த சட்டமானது இரு நாடுகளுக்கும் இடையே இராஜதந்திரம் அல்லாத கணிசமான உறவுகளை வரையறுக்கிறது.

தாய்வானை சீனா தாக்கினாலோ தாய்வானுக்குள் ஊடுருவினாலோ இராணுவ ரீதியாக அமெரிக்கா தலையிடுவதற்கு இந்தச் சட்டம் உத்தரவாதம் அளிக்கவில்லை. ஆனால், தாய்வான் போதுமான தற்காப்புத் திறன்களைப் பேணுவதற்குத் தேவையான அளவு ஆயுத உதவி உள்ளிட்ட உதவிகளை அமெரிக்கா வழங்குவதற்கு இச்சட்டம் வழிவகுக்கிறது.

தாய்வானைப் பாதுகாக்க இராணுவ ரீதியாக அமெரிக்கா தலையிடுமா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு கடந்த மே மாதம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், 'ஆம்' என பதிலளித்தது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. பைடனின் கருத்துக்கு சீனா கடுமையான கண்டனத்தைத் தெரிவித்தது. அதன் பின்னர், 'பைடனின் இந்தக் கருத்தால் அமெரிக்காவின் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டதாகக் கருதக் கூடாது' என வெள்ளை மாளிகை விளக்கம் அளிக்க நேரிட்டது. அதேபோன்ற ஒரு சூழலை அமெரிக்கா இப்போதும் ஏற்படுத்தியுள்ளது.

தாய்வானைத் தங்கள் நாட்டின் ஒரு பகுதியாக இணைக்க இராணுவத்தையும் பயன்படுத்துவோம் என சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் ஏற்கெனவே கூறியுள்ளார். இராணுவ பலத்தை ஒப்பிட்டால் சீனாவின் பிரமாண்டமான படை பலத்தின் முன்னால் தாய்வானால் சிறிதளவுகூட தாக்குப்பிடிக்க முடியாது. அதை தாய்வானும் உணர்ந்தே உள்ளது.

தென் சீனக் கடலில் பல தீவுகளுக்கு சொந்தம் கொண்டாடி அக்கடல் பகுதியையே கபளீகரம் செய்யத் துடிக்கிறது சீனா. சீனாவின் ஆக்கிரமிப்பால் நாட்டைவிட்டு வெளியேறிய திபெத்திய பௌத்த மதத் தலைவரான தலாய் லாமாவுக்கு இந்தியா அடைக்கலம் அளித்துள்ளதற்கு இப்போதுவரை எதிர்ப்பு தெரிவித்து வருகிறது சீனா. திபெத்தை ஆக்கிரமித்ததுபோல தாய்வானையும் சீனா எந்த நேரத்திலும் ஆக்கிரமிக்கக்கூடும்.

எல்லைப் பிரச்சினையில், பிற நாடுகளை ஆக்கிரமிப்பதில் சீனா எந்தளவுக்கு மோசமாகச் செயல்படும் என்பதற்கு, கடந்த கால உதாரணங்கள் ஏராளம். 'ஒரு நாடு இரு நிர்வாகம்' என ஹொங்கொங்கை நிர்வகிப்பது போன்ற சீனாவின் திட்டத்தை தாய்வான் விஷயத்திலும் சீனா முன்வைத்தது. ஆனால், அந்தத் திட்டத்தை தாய்வான் ஆட்சியாளர்கள் மட்டுமின்றி மக்களும்கூட ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்தச் சூழ்நிலையில் தாய்வான் விஷயத்தில் சீனா, அமெரிக்காவின் செயல்பாடுகளில் சிறிதளவும் பொறுப்புணர்வு இருப்பதாகத் தெரியவில்லை. உக்ரைனை ரஷ்யாவுடன் போருக்குத் தள்ளியதில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைக்கு முக்கியப் பங்கு உண்டு. பேச்சுவார்த்தை மூலம் தீர்வு கண்டிருக்கக்கூடிய உக்ரைன் விவகாரம், ஒரு பெரிய அளவிலான போராக மாறியது இன்னமும் விவாதப் பொருளாகவே உள்ளது.

என்னதான் நேட்டோ படை ஆயுத உதவி அளித்தாலும் போரின் வலியை அனுபவிப்பது உக்ரைன்தான். இப்போதைய சர்ச்சையால் தாய்வான் மீது சீனா உடனடியாகப் படையெடுத்து ஆக்கிரமித்துவிடும் எனக் கூற முடியாது என்றாலும், இன்னொரு உக்ரைனாக தாய்வான் மாறிவிடக் கூடாது.

ஆசியாவில் சீனாவின் கட்டுப்பாட்டை, ஆதிக்கத்தை துவம்சம் செய்ய மேற்குலகம் கங்கணம் கட்டி நிற்கிறது. ஆனால், சீனாவோ எவற்றையும் பொருட்படுத்தாமல் தனது வழியில் பயணத்தை தொடர்கிறது. சீனாவின் பொருளாதார, அரசியல், இராணுவ பலம் உறுதியாக இருக்கும்வரை பீஜிங்குக்கு எதிராக குறிப்பிட்ட ஒரு அளவுக்கு மேல் செல்லமுடியாத நிலைமை உள்ளதென்பதே யதார்த்தம். அதுவரை இராஜதந்திர சண்டைகளுடன் தொடரவேண்டியதுதான்.


# நாகசாக்கி நகரை நாசமாக்கிய 'கொழுத்த மனிதன்'

மனித நாகரீகத்தின் போர் வரலாற்றின் இருண்ட அத்தியாயங்களில் ஒன்று, 2ஆம் உலகப் போரின்போது ஜப்பானிய நகரங்களான ஹிரோசிமா மற்றும் நாகசாக்கி மீது அமெரிக்கா நடத்திய அணுகுண்டுத் தாக்குதல் தான்.

மரணத்தின் விளிம்பில் துடித்துக் கொண்டிருந்த ஒவ்வொரு ஜப்பானியரும் மறக்க முடியாத நாளாக ஓகஸ்ட் 9ஆம் திகதி உள்ளது. ஜப்பானியர் மட்டுமல்ல, ஒட்டுமொத்த உலக மக்களுக்கும் மறக்க முடியாத நாளாக இன்றைய நாள் அமைந்துள்ளது.

சுமார் 77 ஆண்டுகளுக்கு முன்னர் ஜப்பானின் நாகசாக்கி நகர் மீது 'கொழுத்த மனிதன்' என்ற பெயரைக் கொண்ட இரண்டாவது அணுகுண்டு வீசப்பட்ட நாள் இன்றாகும்.

உலகையே அதிர வைத்த இரண்டாம் உலகப்போரின் மிகப்பெரிய தாக்குதல் எதுவென்றால் ஹிரோசிமா, நாகசாக்கி ஆகிய நகர்கள் மீது வீசப்பட்ட அணுகுண்டு தாக்குதலேயாகும்.



இந்த நிலையில், உலக வரலாற்றில் இரண்டாம் முறை அணுகுண்டு போருக்காகவும், தன்னைத் தாக்கிய ஜப்பானை தாக்கி அழிப்பதற்காகவும் கொழுத்த மனிதன் பயன்படுத்தப்பட்டான்.

எனினும், முதல் அணுகுண்டு 'சின்ன பையன்' என பெயரிடப்பட்டு ஓகஸ்ட் 6ஆம் திகதி காலை ஹிரோசிமா நகரின் மீது வெடிக்கப்பட்டது.

பின்னர் மூன்று நாட்களுக்கு பிறகு 2ஆவது அணுகுண்டு 'கொழுத்த மனிதன்' நாகசாக்கி நகரின் மீது வீசப்பட்டது.

இந்த அணுகுண்டு வீச்சுக்களால் சுமார் 120,000 பேர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கொழுத்த மனிதன் அணுகுண்டு புளுட்டோனியம் கருவை கொண்டு அமைக்கப்பட்டதாகும்.

இக்குண்டு அமைக்கப்பட்ட நாடாக ஐக்கிய அமெரிக்கா உள்ளது. இதன் எடை 10,200 இறாத்தல்(4630 கிலோ கிராம்), நீளம் 10.6 அடி(3.25 மீற்றர்), விட்டம் 5அடி (1.52 மீற்றர்) என கூறப்படுகின்றது.

நிலத்திலிருந்து 1.800 அடிகள் உயரத்திலிருந்து பொப்ஸ்கார் என்ற பி. 29 ரகப் போர் விமானத்தில் இருந்து மேஜர் சார்ள்ஸ் சுவீனி என்ற விமானியால் இந்த அணுகுண்டு வீசப்பட்டது.

நாகசாக்கி மலைப்பாங்கான பகுதி என்பதன் காரணமாக ஹிரோசிமாவில் ஏற்பட்ட தாக்குதலுடன் ஒப்பிடும்போது, இங்கு குறைவான விளைவுகளே ஏற்பட்டுள்ளன.

சக்தி வாய்ந்த இந்த அணுகுண்டு ஜப்பான் மீது தொடுக்கப்பட்டதால் சுமார் 39,000 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 25,000 பேர் காயமடைந்துள்ளனர்.

பெண்கள் கொடுமைகளுக்கும் வன்புணர்வுக்கும் அதிகளவில் உட்படுத்தப்பட்டனர். கர்ப்பிணிப் பெண்கள் இரக்கமின்றி படுகொலை செய்யப்பட்ட நாள் இன்றாகும்.

## இன்றைய நாளில்...

* 1173 – பீசா சாயும் கோபுரத்தின் கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இது இரு நூற்றாண்டுகளுக்குப் பின்னரே முடிவுற்றது.

* 1329 – இந்தியாவின் முதலாவது கிறிஸ்தவ மறைமாவட்டம் கேரளத்தில் கொல்லம் நகரில் ஆரம்பிக்கப்பட்டது. யோர்தானுஸ் என்ற பிரான்சியர் முதலாவது பேராயராக நியமிக்கப்பட்டார்.

* 1655 – ஒலிவர் குரொம்வெல் பிரபு இங்கிலாந்தை ஒன்பது மாகாணங்களாகப் பிரித்தார்.

* 1892 – தோமஸ் அல்வா எடிசன் தனது இருவழி தந்திக்கான காப்புரிமம் பெற்றார்.

* 1902 – யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் ரோமன் கத்தோலிக்க ஆலயம் ஒன்றும் பாடசாலை ஒன்றும் இந்துக்களால் தாக்கி அழிக்கப்பட்டன.

* 1945 – இரண்டாம் உலகப் போர்: ஜப்பானில் நாகசாகி நகர் மீது ஐக்கிய அமெரிக்கா கொழுத்த மனிதன் எனப் பெயரிடப்பட்ட அணுகுண்டை வீசியதில் 23,200-28,200 ஜப்பானிய போர்ப் பணியாளர்கள், 2,000 கொரியத் தொழிலாளிகள், 150 ஜப்பானியப் போர் வீரர்கள் உட்பட 35,000 பேர் கொல்லப்பட்டனர்.

* 1965 – சிங்கப்பூர் மலேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேற்றப் பட்டு தனி நாடாக்கப்பட்டது.

* 1974 – வாட்டர்கேட் ஊழல்: அமெரிக்க அரசுத்தலைவர் ரிச்சர்ட் நிக்சன் பதவி விலகினார். அவரது துணைத் தலைவர் ஜெரால்ட் ஃபோர்ட் அரசுத்தலைவரானார்.

* 1991 – யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் ஜூலை 10இல் ஆரம்பித்த ஆனையிறவு இராணுவ முகாமின் மீதான தாக்குதல் முடிவுக்கு வந்தது. இச்சமரில் 604 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர். எனினும் 2000ஆம் ஆண்டில் மீளத் தாக்குதல் மேற்கொண்டு தளத்தைக் கைப்பற்றினர்.

* 1992 – மயிலந்தனைப் படுகொலைகள்: இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டம், மயிலந்தனை என்ற கிராமத்தில் 39 தமிழர் இலங்கைப் படைத்துறையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

* 2006 – திருகோணமலைப் பகுதியில் தமிழ் மக்கள் வெருகல் ஊடாக இடம்பெயர்ந்தபோது விமானத் தாக்குதலுக்குள்ளாகியும் எறிகணைத் தாக்குதலாலும் 05 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

## நக்கல் நமசிவாயம்

9ஆம் திகதி சம்பவங்கள பார்த்து பழகிப்போச்சு... இண்டைக்கு எதாவது சம்பவம் இருந்தாத்தான் நாள் நல்லபடியா இருக்கும் பாருங்கோ....



# மறக்க முடியாத மயிலந்தனைப் படுகொலைகள்!



மயிலந்தனைப் படுகொலைகள் (Mylanthanai massacre) 1992ஆம் ஆண்டு ஓகஸ்ட் 9ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டம், மயிலந்தனை என்ற கிராமத்தில் இடம்பெற்றது. 39தமிழ் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

நேரில் கண்ட சாட்சியங்களின் அடிப்படையில் புனாணை இராணுவ முகாமைச் சேர்ந்த இலங்கை இராணுவத்தினரே இப்படுகொலைகளை நிகழ்த்தியதாக வழக்குத் தொடுக்கப்பட்டது. ஆனாலும், கொழும்பு நீதிமன்றம் ஒன்றில் சான்றாயர் குழு ஒன்று இவர்கள் அனைவரையும் குற்றமற்றவர்கள் எனக் கூறி விடுதலை செய்தது. இறந்தவர்களின் உறவினர்கள் சார்பில் மேன்முறையீடு செய்ய அனுமதிக்கப்படவில்லை.

1992, ஓகஸ்ட் 8ஆம் திகதி சனிக்கிழமை அன்று யாழ்ப்பாண மாவட்டம், அராலித்துறையில் யாழ்ப்பாண மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவ கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்ட அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை ஓகஸ்ட் 9ஆம் திகதி இராணுவத்தினர் மயிலந்தனைத் தாக்குதலை நடத்தினர்.

இந்திரகலா சின்னத்துரை (வயது 28) என்பவரின் நேரடிச் சாட்சியத்தின்படி, இராணுவத்தினர் துப்பாக்கிகள், கத்திகள் மற்றும் கோடரிகள் கொண்டு பெண்கள், குழந்தைகள் உட்படப் பலரைத் தாக்கிக் கொன்றனர். ஒரு வயதுக் குழந்தை ஒன்றும் கொல்லப்பட்டது. 35 பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் நால்வர் மருத்துவமனையில் இறந்தனர். 34 பேர் படுகாயமடைந்தனர்.

### அரசு விசாரணை

1993ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் நாள் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்பு இடம்பெற்று, 24 இராணுவத்தினர் உயிர்த் தப்பியோரினால் அடையாளம் காணப்பட்டனர்.

பின்னர், இவ்வழக்கு பொலன்னறுவை நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்களின் பாதுகாப்புக் கருதி சட்டமா அதிபர் இவ்வழக்கை கொழும்பு நீதிமன்றத்துக்கு மாற்றினார். இதனால் சாட்சிகள் கொழும்பு சென்று சாட்சி சொல்வதற்குப் பெரும் சிரமப்பட்டனர். 1993 செப்டெம்பரில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

மட்டக்களப்பில் இருந்து 30இற்கும் அதிகமான சாட்சிகளுடன் பிண ஆய்வாளரும் விசாரணையில் கலந்து கொண்டனர். தீவிர விசாரணையின் பின்னர் தீர்ப்புக் கூறும் முடிவு சான்றாயர் (jury) குழுவுக்கு கொடுக்கப்பட்டது.

வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட எந்த ஒரு இராணுவத்தினரும் குற்றம் இழைக்கவில்லை என சான்றாயர் குழு ஏகமனதாகத் தீர்ப்பளித்தது. மீண்டும் இதனைப் பரிசீலிக்குமாறு நீதிபதி கேட்டுக் கொண்டபோதும், சான்றாயர்கள் அவர்களைக் குற்றமற்றவர்கள் எனக் கூறினர். கொல்லப்பட்டவர்கள் சார்பாக மேன்முறையீடு செய்வதற்கு சட்டமா அதிபர் ஒப்புதல் அளிக்கவில்லை.

குற்றம் சாட்டப்பட்ட 18இராணுவத்தினரும் நவம்பர் 27ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர். மனித உரிமைக் குழுக்களும், கொல்லப்பட்டவர்களின் உறவினர்களும் இது குறித்து அதிருப்தி தெரிவித்தனர்.

இந்த சம்பவம் மக்களின் மனங்களில் இன்றுவரை மறையாத துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

# அரசியல் தீர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து வவுனியாவில் போராட்டம்

## குருமண்காட்டில் திரண்ட மக்கள் எதிர்ப்புக்கோஷம்





(வவுனியா செய்தியாளர்)

இலங்கையின் வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் என தெரிவித்து வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் வவுனியா குருமண்காடு சந்திப் பகுதியில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், "நாங்கள் நாட்டை துண்டாடவோ தனியரசோ கேட்கவில்லை, இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கின்றோம், எங்கள் பூர்விகக் காணி அனைத்தையும் விடுவி, கௌரவமான உரிமைகளுக்கான மக்கள் குரல், பயங்கரவாத தடைச்சட்டத்தை உடன் நீக்கு, வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும்" போன்ற பல்வேறு வாசகங்களை தாங்கிய பதாதைகளை ஏந்திய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் எழுபதுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குளவிக்கொட்டுக்கு இலக்காகி ஆசிரியரும் இரு மாணவர்களும் காயம்

(மஸ்கெலியா செய்தியாளர்)

மஸ்கெலியா சமனெலிய சிங்கள பாடசாலையில் நேற்று மதியம் குளவிக்கொட்டுக்கு இலக்கான இரண்டு மாணவர்களும் ஆசிரியர் ஒருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்றுக்காலை முதல் வீசும் கடும் காற்று காரணமாக, அப்பகுதியில் கட்டப்பட்டிருந்த குளவிக்கூடு களைந்து, அருகில் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வேளையில், குளவிக்கொட்டுக்கு இலக்காகினர். இவர்கள் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப்பெற்று வருகின்றனர்.

குளவிக்கொட்டுக்கு இலக்காகாமல் ஏனைய மாணவர்களுக்கு உடன் விடுமுறை வழங்கி காப்பாற்றப்பட்டுள்ளனர்.



புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் மற்றும் பிரதேச செயலாளருக்கு பொலிஸாரால் அபகீர்த்தி ஏற்படுத்தப்பட்டதாகத் தெரிவித்து, அதற்கு எதிர்ப்பு வெளியிடும் வகையில் தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர்கள் நேற்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (சாவகச்சேரி செய்தியாளர்)

# வடபகுதி மீனவர்களுக்கு இந்தியாவிலிருந்து மண்ணெண்ணெய் பெற்றுத்தருமாறு கோரிக்கை

## இலங்கை ரூபாவில் பணம் செலுத்துவதாக கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனம் தெரிவிப்பு

(யாழ். செய்தியாளர்)

வடபகுதி கடற்றொழிலாளர்களுக்கு தேவையான மண்ணெண்ணெயை இந்திய தூதரகம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்து வழங்க வேண்டுமென்றும் அதற்கான பணத்தினை நாம் இலங்கை ரூபாவில் வழங்கத் தயாராகவுள்ளோமென்றும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவர் அ.அன்னராசா தெரிவித்தார்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகசந்திப்பின்போதே அன்னராசா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தை பொறுத்தளவில் 23ஆயிரம் கடற்றொழில் குடும்பங்கள் 80ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் மற்றும் அதில் தங்கி வாழும் மக்கள் என அண்ணளவாக ஒருஇ லட்சத்துக்கு மேற்பட்ட மக்களின் வாழ்வாதாரம் மிகப்பெரிய பாதிப்புக்குள்ளாகியுள்ளது. அந்த பாதிப்பு கடற்றொழில் சமூகத்தை பட்டினியை நோக்கி தள்ளுகின்றது.

கடந்த 60நாட்களுக்கு மேல் எமக்குரிய மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை. நூற்றுக்கு எண்பது வீதமான கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்லவில்லை. மண்ணெண்ணெய் இன்று கிடைக்கும் நாளை கிடைக்கும் என்று சொல்லி ஏக்கத்தோடு இரண்டு மாதங்களை கடந்து விட்டோம். மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை. எங்கள் சமூகம் பட்டினியை நோக்கி நகர்கின்றது. இதனை யாரும் கண்டுகொள்ளவில்லை.

எரிபொருள் பற்றாக்குறை இன்றளவில் நிவர்த்தி செய்யப்படுவதாக கூறப்பட்டாலும் கூட, கடற்றொழிலாளர்களுக்கு தேவையான மண்ணெண்ணெய் இன்று வரை கிடைக்கவில்லை. கடந்த வாரம் 6ஆயிரத்து 600லீற்றர் மண்ணெண்ணெய் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு கிடைத்திருக்கின்றது. இதை ஆறு கடற்றொழிலாளர் சங்கங்களுக்கு பகிர்ந்தளித்திருக்கின்றோம். நூற்றுக்கணக்கான சங்கங்கள் எரிபொருளின்மையால் தொழிலை இழந்து வாழ்வாதாரத்தை இழந்துள்ளன. ஜனாதிபதி, எரிசக்தி அமைச்சர், கடற்றொழில் அமைச்சர் ஆகியோர் இணைந்து மண்ணெண்ணெய் விரைவாக வழங்க நடவடிக்கை வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற நல்லூர் மகோற்சவம் இடம்பெற்று வருவதனால் மீன் உண்பவர்களின் தேவை குறைந்துள்ளது. அதனால் எங்கள் பாதிப்பு வெளித்தெரியவில்லை.

அதனை தாண்டி நாங்களே உணவை உண்ண முடியாத நிலையில் இருக்கின்றோம். எங்கள் பிரச்சினை தொடர்பான விடயங்களை மாவட்ட நிர்வாகம் உரிய தரப்புகளுக்கு அனுப்பவேண்டும்.

நாங்கள் யாரிடமும் நிவாரணம் கேட்கவில்லை. உதவி கேட்கவில்லை, மண்ணெண்ணெய் தந்தால் போதும் கடற்றொழில் சமூகம் அதற்கான பணத்தை வழங்கும். இலங்கைக்கான இந்திய தூதர் கோபால் பாக்லேவிடமும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனிடமும் நான் ஒரு பகிரங்க கோரிக்கையை விடுக்கின்றேன்.

வடபகுதி கடற்றொழிலாளர்களுக்கு தேவையான மண்ணெண்ணெயை இந்திய தூதரகம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்து வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கான பணத்தினை நாம் இலங்கை ரூபாவில் வழங்கத் தயாராகவுள்ளோம். வடபகுதி கடற்றொழிலாளர்கள் மீது கருணை காட்டி இந்தியத் தூதரகம் விரைந்து செயற்பட வேண்டும் என்றார்.

# தென்மராட்சி விவசாயிகளுக்கு எரிபொருள் வழங்குவதற்கு ஏற்பாடு

(சாவகச்சேரி செய்தியாளர்)

பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ளும் முகமாக, தென்மராட்சிப் பிரதேச விவசாயிகளுக்கு டீசல் வழங்கி வைக்க தீர்மானித்திருப்பதாக நுணாவில் ஐ.ஓ.சி நிலையத்தின் உரிமையாளர் வை.சிவராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

காலபோக நெற்செய்கைக்கான காலம் நெருங்கி வருகின்றபோதிலும், நிலத்தை பயன்படுத்து வதற்குரிய டீசலை பெற்றுக்கொள்ள முடியாமல் விவசாயிகள் சிரமப்படுகின்றனர். எனவே நாம் அந்தப் பிரச்சினையை தீர்த்துவைத்து விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்த தீர்மானித்துள்ளோம்.

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கமக்கார அமைப்பினர் எம்மோடு தொடர்பு கொண்டு விவசாயிகளுக்குத் தேவையான டீசலை பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும். இதன்போது விவசாயிகளின் பிரதேசத்தை உறுதிப்படுத்தும் முகமாக குடும்ப அட்டை கண்காணிக்கப்படுவதுடன் QR முறைமையின் கீழ் டீசல் வழங்கி வைக்க நடவடிக்கை எடுக்கப் படும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.



பொதுஜன உதவி திணைக்களம் மற்றும் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் அல்ஹாஜ் ரஸித் லாஹிர் ஏற்பாட்டில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 3ஆயிரத்து 500ரூபா பெறுமதியான வவுச்சர் வழங்கும் நிகழ்வு அண்மையில் மட்டக்குளி விஸ்வைக் மைதானத்தில் நடைபெற்றது. இதன்போது அமைப்பாளார் மொஹமட் நவுசாட் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்.எம்.நசார்)






புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பொலிஸார் முறையற்ற விதத்தில் நடந்துகொண்டமையை கண்டித்து வவுனியா பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்று (08) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு: வவுனியா செய்தியாளர்)

# மன்னாரில் நகரசபையின் ஏற்பாட்டில் கால்வாய்கள் தூய்மைப்படுத்தும் திட்டம்



(மன்னார் நகர் செய்தியாளர்)

மன்னார் நகரசபையின் மேற்பார்வையில் நீண்ட நாள் பாவனையின்றி காணப்படும் கால்வாய்களை தூய்மைபடுத்தும் செயற்றிட்டம் மன்னார் நகரசபை தலைவர் ஞானபிரகாசம் அன்ரனி டேவிட்சனின் தலைமையில் மன்னார் நகரசபை செயலாளரின் ஒழுங்கமைப்பில் நேற்றுக்காலை 10மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்று வருகின்றது.

குறித்த செயற்றிட்டத்தின் முதல் கட்டமாக மன்னார் வலயக்கல்விப் பணிமனை மற்றும் பிரதேச செயலகம் அமைந்துள்ள பகுதியில் நீண்டகாலமாக பயன்பாடின்றி காணப்பட்ட வாய்க்கால்கள் முழுவதுமாக அகற்றப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டது.

மன்னார் நகரசபை ஊழியர்கள் இணைந்து குறித்த சுத்தப்படுத்தல் பணியை மேற்கொண்டுவருவதுடன் மன்னார் நகரசபை உறுப்பினர்களும் ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்.

குறித்த செயற்றிட்டத்தின்கீழ், மன்னார் நகரசபைக்குட்பட்ட பாவனையின்றி காணப்படும் வாய்க்கால்கள் தொடர்ச்சியாக சுத்தப்படுத்தப்பட்டு மீள் பயன்பாட்டுக்கு உகந்ததாக மாற்றியமைக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 08.08.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 134 54 5 | 146 3 04 |
| கனேடியன் டொலர் | 163 876 | 176 1145 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40 8 6 | 44 0158 |
| யூரோ | 250 633 | 265 6510 |
| ஜப்பான் யென் | 1 5152 | 1 6270 |
| சிங்கப்பூர் டொலர் | 145 6553 | 156 816 |
| ஸ்ரேலிங் பவுன் | 318 0 0 | 335 47 1 |
| சுவிஸ் பிராங் | 257 8145 | 275 3564 |
| ஐ.அ.டொலர் | 246 0380 | 257 3587 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 845 8800 |
| குவைட் | குவைட் தினார் | 0,064 7077 |
| ஓமான் | ஓமான் றியால் | 826 02 6 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 1861 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 102 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 1166 |

# 'நாற்திசையும் டயலொக்' செயற்றிட்டத்தினால் தம்பல்கொடவில் புதிய கோபுரம் நிறுவப்பட்டது





நாடு முழுவதிலும் உள்ள கிராமங்கள் மற்றும் தொலைதூர கிராமப்புற சமூகங்களுக்கு தொடர்பாடல் இணைப்பை விரிவுபடுத்தும் தனது உறுதிமொழியை நிலைநிறுத்தி, இலங்கையின் மிகப்பெரிய வலையமைப்பான டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி. அதன் 'நாற்திசையும் டயலொக் ' செயற்றிட்டத்தின்கீழ் கேகாலை மாவட்டத்தில் உள்ள தம்பல்கொட கிராமத்தில் ஒரு தொடர்பாடல் கோபுரத்தை அண்மையில் நிறுவியது.

நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் மேம்படுத்தப்பட்ட இணைப்புடன் இலங்கையரின் வாழ்வை வலுவூட்டும் மற்றும் வளப்படுத்தும் பயணத்தில், கேகாலை மாவட்டத்தில் உள்ள மலல்பொல மற்றும் முவாப்பிட்டிய கிராமங்களிலும் மேலதிக தொலைத்தொடர்பு கோபுரங்களுடன் தம்பல்கொடவில் புதிய கோபுரம் நிறுவப்பட்டுள்ளது. காலி மாவட்டத்தில் தவலம, டொரல மற்றும் பின்கந்த மற்றும் களுத்துறை மாவட்டத்தில் அதிகாரிகுடா ஆகிய இடங்களிலும் தொலைத்தொடர்பு கோபுரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இந்த நெருக்கடியான காலங்களில் வலையமைப்பை விரிவுபடுத்துவதற்கும் வாடிக்கையாளர்களுக்கு ஆதரவளிப்பதற்குமான தன்னுடைய தொடர்ச்சியான முயற்சிகள் மூலம், 2022 ஏப்ரலில் டயலொக் தன் வலையமைப்பில் 4550 மொபைல் 4G தளங்களை அடைந்துள்ளது. இது இலங்கையிலே பதிவுசெய்யப்பட்ட மிக உயர்ந்த கோபுர எண்ணிக்கையாக அமைகிறது. டயலொக் 95% 4G டேட்டா மக்கள் தொகை கவரேஜை பெற்றுள்ளதுடன் அதன் கவரேஜை விரைவாக விரிவடையச் செய்வதில் Green field கோபுரங்களைப் பயன்படுத்தி, தொலைதூர கிராமப்புற சமூகங்களைச் சென்றடைகிறது. மேலும் செறிவான பகுதிகளில் அவசரத்திறன் தேவைகளைப் பூர்த்தி செய்ய Lamp pole தீர்வுமுறையை கையாள்கிறது. தனது கவரேஜ் தடத்தை மேம்படுத்துவதற்கான Dialogஇன் அர்ப்பணிப்பு, வலையமைப்பு பரிசோதனையில் உலகளாவிய அளவில் முன்னணியில் உள்ள நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது, இதன் தொடர்ச்சியாக Open Signalஆனது சிறந்த 4G கவரேஜ் அனுபவம் மற்றும் வேகமான பதிவேற்றம் மற்றும் பதிவிறக்க வேக அனுபவம் ஆகிய விருதுகளை வழங்கியுள்ளது.

நாற்திசையும்
Dialog

# மஸ்கெலியா – நல்லதண்ணி வீதியில் மண்சரிவு அபாயம்

## போக்குவரத்துக்கு தடை





(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா - நல்லதண்ணி பிரதான வீதி மோகினி எல்ல பகுதிகளில் உள்ள லக்சபான தோட்ட வாழமலை பிரிவுக்குட்பட்ட நல்லதண்ணி பிரதான வீதியில் சுமார் 200மீற்றர் தேயிலைச் செடிகளில் உள்ள பாரிய மண்திட்டுகள் சரிந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பாரிய வெட்டுகள் ஏற்பட்டுள்ளதால் அந்த வீதியை உடன் மூடுமாறு, நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும், அப்பகுதி இளைஞர்களால் கண்காணிக்கப்பட்டு வருவதுடன் இது குறித்து நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபட மற்றும் அனர்த்த முகாமைத்துவ அதிகாரி ரஞ்சித் அலககோன் ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளனர்.

# 6,800கிலோகிராம் போதைப்பொருளுடன் பொகவந்தலாவையில் நால்வர் கைது



(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

6ஆயிரத்து 800கிலோகிராம் போதைப் பொருளுடன் பொகவந்தலாவை பொலிஸாரால் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நால்வரும் கடந்த 6ஆம் திகதி மாலை கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், பொகவந்தலாவை பிரதேசத்தை அண்மித்த தோட்டங்களிலுள்ள இளைஞர்களை இலக்குவைத்து, இந்த போதைப்பொருள் வியாபாரத்தில் அவர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இதுதொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய, சந்தேகநபர்களின் வீடுகள், அவர்களின் வர்த்தக நிலையங்கள் பொகவந்தலாவை பொலிஸாரால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதுடன், இதன்போதே பெருமளவு போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் நால்வரும் பொகவந்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவித்துள்ள பொலிஸார், அவர்களை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.



**கண்டி ஸ்ரீதலதா மாளிகையின் எசல பெரஹெராவின் முதலாவது ரந்தோலி பெரஹெரா வீதிஉலா ஆரம்பமானது. ஸ்ரீதலதா மாளிகையின் இந்திரராஜா கொம்பன் யானை புனித கலசத்தை சுமந்துகொண்டு, தலதா மாளிகையின் பிரதான வாயிலான வாஹல்கடவின் முன்னுள்ள சந்திர வட்டக்கல்லில் காலடி எடுத்து வைத்தது. மியன்மார் ராஜா மற்றும் பர்மா ராஜா ஆகிய கொம்பன் யானைகளும் இந்திரராஜா கொம்பன் யானையுடன் பயணித்தன. (கண்டி நிருபர்)**

# ரந்தோலி பெரஹெரா தினத்தின் சம்பிரதாயபூர்வ தேன் காணிக்கை



(கண்டி நிருபர்)

கண்டியின் வரலாற்றுச் சிறப்புமிக்க எசல பெரஹெராவின் முதலாவது ரந்தோலி பெரஹெரா தினத்தின் சம்பிரதாயபூர்வ தேன் காணிக்கை (தேன் பூஜை) நேற்றுமுன்தினம் காலை தம்பானே ஆதிவாசிகளால் மேற்கொள்ளப்பட்டது.

30 பேரடங்கிய ஆதிவாசிகள் குழுவினர், வரலாற்று சிறப்புமிக்க ஸ்ரீதலதா மாளிகைக்கு விஜயம் செய்து இந்த தேன் பூஜையை செய்தனர். ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னியலத்தோ 26ஆவது முறையாக இந்த பூஜையை மேற்கொள்கின்றமை சிறப்பம்சமாகும்.

வரலாற்றுக்காலம் முதல் ஒவ்வொரு காலகட்டத்திலும் பழங்குடி தலைவர்கள் இந்த தேன் பூஜையை மிகுந்த பயபக்தியுடன் பெரஹெராவின்போது செய்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நாவலப்பிட்டியில் 600குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள் வழங்கிவைப்பு





மலையகத்தில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நாவலப்பிட்டிபிரதேசத்தில் உள்ள 600 குடும்பங்களுக்கு திருகோணமலை மாவட்டத்தில் இயங்கிவரும் அரசசார்பற்ற நிறுவனமான Global Ehsan Reliefஇனால், அத்தியாவசிய உணவுப் பொதிகளை வழங்கியது.

திருகோணமலை அரசாங்க அதிபர் பி.எச்.என். ஜெயவிக்ரமவின் வேண்டுகோளுக்கிணங்க, இந்த நிவாரணப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நாவலப்பிட்டி பிரதேச செயலகத்தின் செயலாளர் சமீர நுவன் ரத்நாயக்க, காணி அதிகாரி ஷிரந்த உதயகுமார மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கண்டி அரசாங்க அதிபர் சந்தன தென்னகோன் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர்களான லலித் எதம்பாவல மற்றும் உத்பலா ஜயரத்ன ஆகியோரின் மேற்பார்வையில் இந்த நிவாரணப் பணிகள் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

# சிறுத்தைப்புலி உயிரிழப்பு சம்பவம்

## அதிகாரிகளின் அலட்சியமெனில் அவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள பணிப்புரை



(க.கிஷாந்தன்)

ஹட்டன், டிக்கோயா - வனராஜா சமர்வில் தோட்டப்பகுதியில் உள்ள மரமொன்றில் ஏறிய நிலையில் உயிரிழந்த சிறுத்தைப்புலியின் மரணம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர, அமைச்சின் செயலாளர் திருமதி. சந்திரா ஹேரத்துக்கு நேற்று(08) பணிப்புரை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம்(07) அப்பகுதியில் உள்ள மரக்கறி தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த வலையில் சிக்கி காயமடைந்த குறித்த சிறுத்தைப்புலி, காயத்துடன் கம்பியில் அகப்பட்டவாறே மரத்தில் ஏறியுள்ளது. இதனையடுத்து, சிறுத்தைப்புலியை உயிருடன் பிடிக்கும் நடவடிக்கையில், நல்லதண்ணி வனவிலங்குகள் அலுவலக அதிகாரிகள் மற்றும் பொலிஸார் நடவடிக்கை எடுத்ததுடன், சிறுத்தைப்புலி ஏறிய மரத்தையும் வெட்டியுள்ளனர்.

இதன்போது, சிறுத்தைப்புலியின் மீதே மரம் விழுந்ததால் அது உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இவ்விடயம் தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து, உரிய அதிகாரிகளின் அலட்சியத்தால் குறித்த சிறுத்தைப்புலி உயிரிழந்தது என உறுதி செய்யப்பட்டால், வனவிலங்கு அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு செயலாளருக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான விசேட விசாரணைகளுக்காக மேலதிக செயலாளர் அடங்கிய குழுவொன்று ஹட்டன் டிக்கோயா சமர்வில் தோட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் திருமதி சந்திரா ஹேரத் அமைச்சருக்கு அறிவித்துள்ளார்.

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

(எம்.எல்.எஸ்.முஹம்மத்)



ஹெம்மாத்தகம கோட்டேகொடை, வஹகொட்டுவையைச் சேர்ந்த மாவனல்லை பதுரியா தேசிய பாடசாலையின் அதிபர் அல்ஹாஜ் எம்.ஏ.எம். நிஸ்தார் அகில இலங்கை சமாதான நீதவானாக மாவனல்லை மாவட்ட நீதிமன்ற நீதவான் டம்மிக ஹேமபால முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக கேகாலை மாவட்ட மக்களின் கல்வி அபிவிருத்தி, சமூக வளர்ச்சி மற்றும் தேசிய ஒற்றுமை உட்பட பல்வேறு துறைகளில் மிக அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுவரும் அதிபர் நிஸ்தார், ஹெம்மாத்தகம அல்-அஸ்ஹர் தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபராகவும், கோட்டேகொடை மஸ்ஜிதுல் ஹுதா ஜும்ஆப் பள்ளியின் முன்னாள் நிர்வாக சபை தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

கடந்த 2012ஆம் ஆண்டு முதல் கேகாலை மாவட்ட சமாதான நீதவானாக செயற்பட்டுவரும் அதிபர் நிஸ்தார், 2022 ஏப்ரல் 27முதல் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

# கறுப்பாடுகளின் செயற்பாடுகளால் கூட்டமைப்பின் பலம் மக்கள் மனதிலிருந்து குறைந்து வருகின்றது

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமாக இருந்திருக்கின்றது. ஆனால், இரண்டு மூன்று கறுப்பாடுகளின் செயல்பாடுகளால் மக்களின் மனதிலிருந்து அது குறைந்து வருகின்றது. இதனை அனுமதிக்க முடியாது - என தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) பத்தாவது தேசிய மாநாட்டில் உரையாற்றும்போதே செல்வம் அடைக்கலநாதன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகள் உட்பட ஆயுதப் போராட்ட இயக்கங்கள் அனைத்தும் ஒன்றுபட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும். தனிக்கட்சிகளின் எந்தவொரு நாட்டாமைத்தனத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்படவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட வேண்டும். இல்லையேல், தமிழ் மக்களை நாம் காப்பாற்ற முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்படாவிட்டால் அது இல்லாமல் போகும்.

வெறும் உதட்டளவிலேயே தமிழ் மக்களின் விடுதலை தொடர்பில் தற்போது பேசப்படுகிறது. உளப்பூர்வமான விடுதலை தொடர்பாக பேசவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட வேண்டும். மக்களை ஏமாற்றக் கூடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும். அண்ணன் தம்பி என்று நாட்டாமைத்தனம் வேண்டாம். எங்கள் மக்கள் தற்போது இக்கட்டான சூழலில் இருக்கின்றார்கள்



அவன் பிழை, இவன் பிழை என நாம் கூறுகின்றோம். மக்களின் கஷ்டங்களை போக்குகின்ற இனத்தை விடுதலை செய்கின்ற விடயங்களில் நாங்கள் ஒற்றுமையாக இருக்கின்றோமா? ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தைச் சொல்லிக்கொண்டிருக்கின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அனுபவம்மிக்க தலைவர்கள் இருக்கின்றார்கள். அவர்களது ஆலோசனைகளை பெறுவதற்கான வாய்ப்பை உண்டுபண்ண வேண்டும். தற்போது வந்தவர்கள் தமிழரசுக் கட்சியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இல்லாதொழிக்கின்ற செயலை செய்கின்றனர். இதனை ஒரு காலமும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

22 இலிருந்து தற்போது 10ஆக நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மாறியுள்ளது.

ரணில் விக்ரமசிங்க பற்றி உங்களுக்குத் தெரியும். விடுதலைப் புலிகளை உடைத்தவர். அவருடைய இராஜதந்திரத்தை பற்றி சொல்கின்றபோது நரித் தந்திரம் என்பார்கள். அந்த தந்திரமே விடுதலைப் புலிகளையும் பிரித்தாண்டது.

அந்தத் தந்திரத்தையே நாங்கள் அண்மையில் பேசுகின்றபோது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கையாண்டார். கூட்டமைப்பில் சிலர் தனக்கு வாக்களித்தார்கள் எனக்கூறினர். சித்தார்த்தன், கோவிந்தன் கருணாகரன் ஆகியோர் அதனை எதிர்த்துக் கதைத்தார்கள்.

வெளியில் வந்தபோது ரணில் இவ்வாறு கூறியதாக ஒரு செய்தி வெளியானது. ரணிலின் கருத்தை வலுப்படுத்துகின்ற வகையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்துகின்ற வகையிலும் ஒரு சிலரின் கருத்துகள் இருந்தன.

அதனால் யாருக்கு வெற்றி என்று சொன்னால் அது ரணிலுக்கே வெற்றி. நாகரீகம் கருதி நான் யாருடைய பெயரையும் குறிப்பிட விரும்பவில்லை. மாநாடு என்பதால் நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. இது யாருக்கு நட்டம். ஜனாதிபதி சரியாக காயை நகர்த்தியிருக்கின்றார். அதனை நாங்கள் தூக்கிப்பிடித்துக்கொண்டு எங்கள் மக்கள் மத்தியில் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றோம்.

ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமாக இருந்தது, இருக்கின்றது.

இரண்டு மூன்று கறுப்பாடுகளுடைய செயல்பாடுகளால் மக்களின் மனதிலிருந்து அது குறைந்து வருகின்றது. இதனை அனுமதிக்க முடியாது. பலமாக 22ஆசனங்களைக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிலிருந்து வீழ்ச்சியடைந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்தவர்கள் மீண்டும் இணையவேண்டும். விடுதலைப் புலிகள் உட்பட ஆயுதப் போராட்ட இயக்கங்கள் ஜனநாயக நீரோட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து செயற்படுகின்ற சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டும் - என்றார்.

# புதுக்குடியிருப்பு பிரதேச செயலரை அசௌகரியத்திற்கு உட்படுத்தியமையை கண்டித்து வடக்கில் போராட்டம்



(யாழ். நிருபர்)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலரை வேண்டுமென்றே அசௌகரியங்களுக்கு உட்படுத்தியமைக்கு எதிராக வடமாகாணத்திலுள்ள பிரதேச செயலகங்களில் நிர்வாக சேவை அதிகாரிகளால் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் மற்றும் பிரதேச செயலரின் உத்தியோகபூர்வ வதிவிடம் ஆகியவற்றில் கடந்த 30ஆம் திகதி இரவு சோதனை நடவடிக்கையை மேற்கொண்டு 65லீற்றர் எரிபொருளை மீட்டிருந்தனர்.

அலுவலக மின்பிறப்பாக்கியின் தேவைக்கான 50லீற்றர் டீசல், பிரதேச செயலரின் சொந்த பாவனைக்காக சேமித்து வைத்திருந்த 10லீற்றர் பெற்றோல் மற்றும் 5லீற்றர் மண்ணெண்ணெய் என்பவற்றையே பொலிஸார் மீட்டிருந்தனர் என பிரதேச செயலர் ஊடகங்களுக்கு அறிவித்திருந்தார்.

இந்நிலையில், பிரதேச செயலரை வேண்டுமென்றே பழிவாங்கும் நோக்குடன் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸார் நடந்து கொண்டதாகவும், திட்டமிட்டு பிரதேச செயலரை அசௌகரியத்திற்கு உட்படுத்தி, அவரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் விதமாக பொலிஸார் நடந்து கொண்டதாகவும், அதனால் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸாருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கக் கோரி, நிர்வாக சேவை வடக்கு கிளை சங்கம் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தது.

வடக்கிலுள்ள பிரதேச செயலகங்களில் நேற்று திங்கட்கிழமை காலை 09மணி முதல் 11மணி வரையில் சுகயீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், கவனயீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

# மோட்டார்சைக்கிளின் ஒயில் டேங்கினுள் மண்ணை அள்ளிப்போட்ட விஷமிகள்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்தில் எரிபொருள் வரிசையில் அடுக்கிவிடப்பட்டிருந்த மோட்டார்சைக்கிளின் ஒயில் டேங்கினுள் விஷமிகள் மண்ணை அள்ளிக் கொட்டியுள்ளனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

யாழ்.நகர் மத்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் எரிபொருளை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் மோட்டார் சைக்கிள்களை அதன் உரிமையாளர்கள் வரிசையில் அடுக்கி வைத்துள்ளனர்.

அவ்வாறு இளைஞர் ஒருவரும் தனது பெறுமதிமிக்க நவீனரக மோட்டார்சைக்கிளை எரிபொருளுக்கான வரிசையில் நிறுத்திவிட்டு இரவு வீடு சென்றுள்ளார். மறுநாள் காலை எரிபொருள் விநியோகிக்கும்போது, வரிசையில் நின்று தனது மோட்டார்சைக்கிளுக்கு எரிபொருளை நிரப்பியுள்ளார்.

எரிபொருளை நிரப்பிய பின்னர் மோட்டார் சைக்கிளை இயக்கி ஓடியபோது அதன் இயந்திர சத்தம் மாற்றமடைந்து வித்தியாசத்தை உணர்ந்துள்ளார்.

அதனையடுத்து, அவர் தனது மோட்டார் சைக்கிளை திருத்துவதற்கு கொண்டுசென்று சோதனை செய்தபோதே, மோட்டார்சைக்கிளின் ஓயில் டேங்கினுள் விஷமிகள் மண்ணை அள்ளி போட்டிருந்தமை தெரியவந்தது.

ஓயில் டேங்கினுள் மண்ணை போட்டமையால் மோட்டார்சைக்கிளின் இயந்திரத்தின் உட்பாகங்கள் பழுதடைந்துள்ளன. தற்போதைய பொருளாதார நெருக்கடி காலத்தில், மோட்டார்சைக்கிள் உதிரிப்பாகங்களுக்கு தட்டுப்பாடு நிலவி அவற்றின் விலைகள் உச்சத்தைத் தொட்டுள்ள நிலையில், இளைஞனின் மோட்டார்சைக்கிளை மீளத் திருத்தி எடுப்பதற்கு பெருமளவான பணம் செலவழியும் என மோட்டார்சைக்கிள் திருத்துநர் தெரிவித்தார்.

## வீட்டின் முன்பிருந்த மோட்டார்சைக்கிள் திருட்டு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் நகரை அண்டிய பகுதியில் மோட்டார்சைக்கிள் ஒன்று களவாடப்பட்டுள்ளது.

யாழ். நகரை அண்டிய சிவகுருநாதன் வீதியிலுள்ள வீடொன்றின் முன்பாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த சுப்பர் கப் ரக மோட்டார்சைக்கிளே நேற்று திங்கட்கிழமை அதிகாலை களவாடப்பட்டுள்ளது. குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் மோட்டார் சைக்கிள் உரிமையாளர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

# சிலிண்டர்களை திருடியோர் கைது



(யாழ். நிருபர்)

ஓட்டுமடம் பகுதியிலுள்ள லாவ்ஸ் எரிவாயு நிறுவனத்தின் களஞ்சியசாலையை உடைத்து 52வெற்றுச் சிலிண்டர்களை திருடிய குற்றச்சாட்டில் முதன்மை சந்தேக நபர்கள் உட்பட 06பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த சில நாட்களுக்குமுன் ஓட்டுமடம் பகுதியிலுள்ள லாவ்ஸ் எரிவாயு நிறுவனத்தின் களஞ்சியசாலையை உடைத்து 07இலட்சத்து 80ஆயிரம் பெறுமதியான 52வெற்றுச் சிலிண்டர்கள் திருட்டுப் போயிருந்தன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் தலைமை பொலிஸ் பரிசோதகர் நிஹால் பிரான்சிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம் பொம்மைவெளி மற்றும் நாவாந்துறை பிரதேசங்களைச் சேர்ந்த 06பேர் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்களிடமிருந்து திருடப்பட்ட சிலிண்டர்களும் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர்கள் விசாரணைகளின்பின் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

# கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத்தில் நிதி முதுமாணி பட்டப்படிப்பை சீன மாணவர்கள் பின்பற்ற விரைவில் நடவடிக்கை







கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் நிதி முதுமாணிப் பட்டப்படிப்பு - 2022இல் இணைந்த சீன மாணவர்களின் ஒரு தொகுதிக்கான தொடக்க விழாவை இலங்கைத் தூதரகம் அண்மையில் நடத்தியது. முதல் குழுவில் 30 சீன மாணவர்கள் உள்ளனர். சீன மாணவர்களை இலங்கையில் கல்வி கற்க ஊக்குவிப்பதற்காக தூதரகம் மேற்கொண்ட விரிவான முயற்சிகளின் விளைவாக இவர்கள் இணைக்கப்பட்டனர். இந்த மாணவர்கள் முழுமையான பாடக் கட்டணத்தையும் செலுத்தவுள்ளனர்.

பீஜிங்கிலுள்ள இலங்கைத் தூதரகம், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சீனா-ஆசியா பொருளாதார அபிவிருத்தி சங்கம், பியூட்டிஃபுல் சைனா இன்வெஸ்ட்மென்ட் கோ மற்றும் டுமாரோ டெக்னொலஜி கல்வி சேவைகள் நிலையம் ஆகியவை இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தன.

இந்நிகழ்வில் உரையாற்றிய கொழும்பு பல்கலைக்கழகத்தின் பழைய மாணவரான தூதுவர் கலாநிதி பாலித கொஹொன, பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் திட்டத்தில் முதுமாணி நிதிப் பட்டத்திற்கு தெரிவான மாணவர்களை வாழ்த்தியதோடு, சர்வதேச மாணவர்களை இலங்கை அன்புடன் வரவேற்பதாகத் தெரிவித்தார். நாட்டின் உயர் கல்வி முறையில் மாணவர்கள், தொழில்துறையினர், ஊழியர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களை மகிழ்விப்பதே நாட்டின் நோக்கம் என்றும், கட்டணம் செலுத்தும் வெளிநாட்டு மாணவர்களுக்கு இலங்கை பட்டப்படிப்புத் திட்டங்களை வழங்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

விஞ்ஞானம், சட்டம், தகவல் தொடர்பு தொழில்நுட்பம், உயிரியல் போன்ற பல்வேறு துறைகளில் உலகிற்குப் பங்களித்த பெருமளவிலான தலைசிறந்த பிரமுகர்களை இலங்கை உருவாக்கியுள்ளதுடன், இப்போது நாசா, ஐக்கிய நாடுகள் சபை, போயிங், கூகுள் போன்ற நிறுவனங்களில் அவர்கள் பணிபுரிகின்றனர்.

மேலும் அதிகமான சீன மாணவர்களை இலங்கையில் கல்வி கற்பதற்காக தூதுவர் ஊக்குவித்தார். அதேநேரம், மாணவர்களின் குடும்ப உறுப்பினர்களை சுற்றுலாப் பயணிகளாக இலங்கைக்கு வருமாறும், இலங்கையின் அழகையும் விருந்தோம்பலையும் அனுபவிக்குமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

இந்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு அறிவைப் பெறவும், சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையே பாலமாகவும், கலாசார தூதுவராகவும் செயற்பட்டு புதிய அத்தியாயத்தை எழுதுமாறு சீன-ஆசிய பொருளாதார அபிவிருத்தி சங்கத்தின் சர்வதேச கல்விப் பரிமாற்றக் குழுவின் தலைவர் வாங் கெஜியன் கேட்டுக்கொண்டார்.

டுமாரோ தொழில்நுட்பக் கல்வி சேவைகள் நிலையத்துடன் இணைந்து சீன முதலீட்டு நிறுவனம் அதிகளவான சீன மாணவர்களை இலங்கையில் கல்வி கற்க அனுப்பவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள் உட்பட 80இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டதுடன், சிலோன் தேநீர் மற்றும் தெம்பிலி (செவ்விளநீர்) வழங்கும் வரவேற்பு நிகழ்ச்சியுடன் நிறைவுற்றது.

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜனாதிபதியுடன் கலந்துரையாடி விரைவில் தீர்வு

## அமைச்சர் பந்துல குணவர்தன நாவலப்பிட்டியில் தெரிவிப்பு







(க.கிஷாந்தன்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கலந்துரையாடி பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை விசேட தேவையாகக் கருதி தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாக நாவலப்பிட்டியில் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழையால் பல பகுதிகள் பாரிய சேதங்களை எதிர்கொண்டுள்ளன. அத்தோடு, தோட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பாலங்கள் வெள்ளத்தில் அள்ளுண்டு செல்லப்பட்டதால் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இவ்வாறு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்காக பெருந்தெருக்கள், போக்குவரத்து மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன வெள்ளத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட நாவலப்பட்டி பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

மத்திய மலைநாட்டில் தொடர்ச்சியாக பெய்த கடும் மழை காரணமாக இடிந்து விழுந்த நாவலப்பிட்டி - இங்குருஓயா பாலத்தை இதன்போது அவர் பார்வையிட்டதோடு, வட்டவளை ஹைட்ரி தோட்டத்தில் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களையும் நேரில் சென்று பார்வையிட்டார்.

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் அழைப்பின்பேரில் அப்பகுதிக்கு விஜயம் செய்த அமைச்சர் பந்துல குணவர்தன, நாவலப்பிட்டி - இங்குரு ஓயா பாலம் இடிந்து வீழ்ந்ததன் காரணமாக இங்குரு ஓயா பகுதிக்கு செல்ல முடியாத நிலை குறித்து மக்களிடம் கேட்டறிந்தார்.

இந்த விஜயத்தின்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன, நாவலப்பிட்டி பிரதேசமே வெள்ளத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வெள்ளத்தினால் பல உயிர்கள் பலியாகியுள்ளதாகவும், அங்கு வாழ்ந்த மக்களின் பல வீடுகள் வெள்ளத்தினால் அழிந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கலந்துரையாடி பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை விசேட தேவையாகக் கருதி தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# யாழில். நீர் இறைக்கும் இயந்திரங்களை திருடிய குற்றத்தில் நால்வர் கைது



யாழ். செய்தியாளர்

யாழ்ப்பாணம் கட்டுவான் பகுதிகளில் திருடப்பட்ட சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரங்களை திருடிய குற்றச்சாட்டில் நான்கு பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை பொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட கட்டுவான் பகுதிகளில் அண்மைக்காலமாக நீர் இறைக்கும் மின் மோட்டார்கள், நீர்ப் பம்பிகள் திருடப்பட்டு வந்துள்ளன.

இது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் உரிமையாளர்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டுவந்த நிலையில் அது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்தி வந்தனர்.

இந்த விசாரணைகளின் அடிப்படையில் நான்கு நபர்களை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்து அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் அவர்களிடமிருந்து சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான 7 நீர் இறைக்கும் மின் மோட்டார்களை மீட்டுள்ளனர்.

இதன்போது கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கண்டியில் சிறுவனை கடத்தியவர் மஹரகமவில் பொலிஸாரால் கைது

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் வருடாந்த பெரஹர நிகழ்வைக் காண பெற்றோருடன் வந்த சிறுவன் ஒருவனைக் கடத்திய குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.


கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து அவிசாவளை நோக்கிப் பயணித்த புகையிரதத்தில் சென்றுகொண்டிருந்தபோது சிறுவன் மீது ஏற்பட்ட சந்தேகத்தின் காரணமாக பயணிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதன்போது சிறுவனைக் கடத்தியதாக சந்தேகிக்கப்படும் நபர் அங்கிருந்து தப்பிச்செல்ல முற்பட்டுள்ளார். அங்கிருந்த பயணிகள் உடனடியாக அவரை மடக்கிப் பிடித்ததுடன், பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து விடயத்தைக் கூறியுள்ளனர்.

மஹரகம பொலிஸாரால் அந்த சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டதுடன் சிறுவனும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளான்.

உணவு வாங்கித் தருவதாகக் கூறி கண்டியிலிருந்து சிறுவனை இந்த சந்தேக நபர் அழைத்துச் சென்றுள்ளமை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கண்டி உடபேராதெனிய பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

# டெங்கு தீவிரமடையும் ஆபத்து; சுகாதார அமைச்சு எச்சரிக்கை



மழையுடன் கூடிய கால நிலையையடுத்து எதிர்வரும் வாரங்களில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கக் கூடுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இவ்வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் சுமார் 50 ஆயிரம் வரையான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அவர்களில் 52 சதவீதத்துக்கும் அதிகமானோர் கொழும்பு, களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் பதிவாகியுள்ளனர். எதிர்காலத்தில் மேலும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடுமென டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

டெங்க ஒழிப்பு வேலைத் திட்டம் பிரதேச மட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதோடு, பிலியந்தலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஊடாக டெங்கு அபாயம் காணப்படும் பிரதேசங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டன. நுளம்பு பெருகும் வகையில் சூழலை வைத்திருந்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

# மண் மேடு சரிந்ததில் ஹட்டனில் வீடு சேதம்



(மனுர சுதத் செல்லஹேவா)

ஹட்டன் ரயில் நிலையத்துக்கு அருகில் மண்மேடு சரிந்து விழுந்ததில் வீடொன்று முழுமையாக சேதமடைந்துள்ளது.

அப்பகுதியில் தொடர்ச்சியாக பெய்துவந்த அடைமழை காரணமாக மண்மேடு சரிந்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர். மண்சரிவின் காரணமாக வீடும் வீட்டிலுள்ள பொருட்களும் சேதமடைந்துள்ளன.


திகதி 07.08.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4840
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,532,260.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 31,161,567.60
ஆங்கில எழுத்து V வெற்றி இலக்கங்கள் 4 0 5 1 3 1

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3082
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,243,380.00
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 11 53 60 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,773,111.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 870
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,706,760.00
Q 27 35 37 69
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 120,700,756.40

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 149
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,490,300.00
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 05 06 13 26
விசேட இலக்கினம் துலாம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,631,607.80

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1188
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,238,840.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 264,404,522.00
S 15 01 28 31 39
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01


# நானாட்டானில் இலவச மருத்துவ முகாம்











(மன்னார் நகர் நிருபர்)

வடமாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஞா.குணசீலனின் ஏற்பாட்டில் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (07) இலவச நடமாடும் மருத்துவ முகாம் இடம்பெற்றது.

நானாட்டான் சிவராஜா இந்து வித்தியாலயத்தில் குறித்த நடமாடும் மருத்துவ முகாம் மற்றும் வாசிப்பு மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மோட்டக்கடை, அச்சங்குளம், உமநகரி, நறுவிலிக்குளம், இராசமடு, பள்ளங்கோட்டை, இராசமடு, வாழ்க்கை பெற்றான் கண்டல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் குறித்த மருத்துவ முகாமில் கலந்துகொண்டு மருத்துவ உதவிகளைப் பெற்றுக்கொண்டனர்.

குறித்த நடமாடும் மருத்துவ முகாம், வைத்திய கலாநிதி எல்மர் எட்வேட், சமூகசேவகர் இ.எட்வின் அமல்ராஜ் மற்றும் புலம்பெயர் தமிழ் உறவுகளின் நிதி மற்றும் பங்களிப்புடன் இடம்பெற்றது.

இந்த நடமாடும் மருத்துவ முகாமில் கிராம அலுவலர் மற்றும் வைத்தியர்கள் கலந்துகொண்டிருந்ததோடு நாட்டில் மீண்டும் கொரோனா தொற்று அதிகரித்து காணப்படும் நிலையில் உரிய சுகாதார நடைமுறைகளுக்கமைவாக இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# அத்தியாவசிய பொருட்களுக்கான விலைகுறைப்பு மஸ்கெலியாவில் நடைமுறையில் இல்லை

## பொதுமக்கள் விசனம்

(மஸ்கெலியா செய்தியாளர்)

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் அரசாங்கம் பாவனையாளர்களுக்கு விலைகளை குறைத்தாலும் மக்களுக்கு அது நடைமுறையில் இல்லையென பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன் பருப்பு, மிளகாய், கிழங்கு, சீனி, வெங்காயம், பூண்டு போன்ற பொருட்களுக்கு விலை குறைப்பை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியது.

இருந்தபோதிலும் இந்த விலைக்கு வர்த்தக நிலையங்கள் விற்பனை செய்ய மறுக்கின்றனர். பாவனையாளர் கேட்டால் எமக்கு இன்னும் அந்த விலைக்கு குறிப்பிட்ட சாமான் வரவில்லை என்று கூறுகிறார்கள்.

விலை அதிகரித்தால் உடனே பண்டங்கள் விலை அதிகரித்து விற்பனை செய்யும் இவர்கள், ஏன் விலை குறைந்தால் குறைத்து விற்பனை செய்வதில்லை என கேள்வி எழுப்புகின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பலசரக்கு கடைகளை பார்வையிட்டு அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாவனையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அதிக ஆராய்ச்சியாளர்களை உருவாக்க தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புதிய வேலைத்திட்டம் ஆரம்பம்

## எதிர்காலத்தில் பல இலக்குகளை அடைவோம் என உபவேந்தர் றமீஸ் உறுதி





(மாளிகைக்காடு நிருபர்)

பட்டப்பின் படிப்பின் மூலம் அதிக ஆராய்ச்சியாளர்களை உருவாக்க தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தனது பணியை ஆரம்பித்துள்ளதுடன், அதனூடாக எதிர்காலத்தில் பல இலக்குகளை அடையும் - என்று இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீடத்தில் பட்டபின் படிப்பினை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (07) பல்கலைக்கழக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதி கலாநிதி சுபீனா எம்.ஜி.ஹசன் மற்றும் பட்டபின் படிப்புகளுக்கான இணைத்தலைவர் பேராசிரியர் அப்துல் றவூப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

இந்தியா உட்பட பல நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் ஆராய்ச்சியாளர்கள் குறைவாக இருக்கிறார்கள். இலங்கையில் Master of Philosophy (Mphil) மற்றும் Doctor of Philosophy (PhD) போன்ற பட்டப்பின் படிப்பின் மூலம் அதிக ஆராய்ச்சியாளர்களை உருவாக்க தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தனது பணியை ஆரம்பித்துள்ளதுடன், எதிர்காலத்தில் பல மைல்கற்களை அடையும்.

பல்கலைக்கழகத்தின் 25 வருட வரலாற்றில் முதன்முறையாக Master of Philosophy (Mphil) மற்றும் Doctor of Philosophy (PhD) படிப்புகளை ஆரம்பிப்பதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு இதற்கான விரிவுரையாளர்களின் பங்களிப்பிற்கு முக்கியமானதாகும்.

முகாமைத்துவ மற்றும் வர்த்தக பீடம் மற்றும் கலை மற்றும் கலாசார பீடங்கள் பல்கலைக்கழகத்தின் முன்னோடி பீடங்கள் என்றும் பல முயற்சிகளில் எப்போதும் முன்னோடியாக இருந்துவருகிறது.

Master of Philosophy (Mphil) மற்றும் Doctor of Philosophy (PhD) என்பது ஆராய்ச்சி வாழ்க்கையின் ஆரம்பம். மேலும் வாழ்க்கையில் சாதிக்க இன்னும் நிறைய உள்ளது.

உங்கள் பட்டபின் படிப்பின் ஆரம்பத்திலிருந்தே தொழில் கூட்டாண்மை மூலம் பயனடைவீர்கள், எதிர்கால வேலைகளை சமாளிப்பதற்குத் தேவையான திறன்கள் மற்றும் அனுபவத்துடன் நீங்கள் பட்டம் பெறுவது உறுதி செய்வதற்கு எங்கள் படிப்புகள் கைகூடும்.

பட்டபின் படிப்புகளில் நான்கு முக்கிய வகைகள் உள்ளன.

கற்பிக்கப்படும் படிப்புகள், ஆராய்ச்சி பட்டங்கள், மாற்றுப் படிப்புகள் மற்றும் தொழில்முறை தகுதிகள் உள்ளன. ஆகவே, விண்ணப்பிக்கும் மற்றும் படிக்கும் படிப்புகளிள் வகை உங்கள் தொழில் நலன்களைப் பொறுத்ததாகும்.

முதுகலைப் படிப்பின் பல நன்மைகள் உள்ளன, என்னைப் பொறுத்தவரை ஒரு தனிப்பட்ட சாதனையாகும். மேலும் தற்போது அறிவைக் கட்டியெழுப்பவும் எனது அறிவுசார் ஆர்வங்களை விரிவுபடுத்தவும் ஒரு வழியாகும்.

எதிர்கால தொழில்வாய்ப்புகளை மேம்படுத்தும் நீங்கள் நிச்சயமற்றதாக உணர்ந்தால், ஆசிரியர் மற்றும் வேலைவாய்ப்பு சேவைகள் எப்போதும் ஆதரவு மற்றும் வழிகாட்டுதலுக்காக இருக்கும்மெனவும், உங்கள் கனவுகளைத் துரத்தவும் கடினமாக உழைக்கவும் உங்களால் சாதிக்க முடியாதது எதுவுமில்லையென்றும் உபவேந்தர் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் சிறப்பு பேச்சாளராக இந்தியாவின் கேரளா கொச்சி பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ நிறுவனத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி கே.எஸ். சந்திரசேகர் நவீன தொழில்நுட்பத்தினூடாக சிறப்புரையாற்றினார்.

# திருகோணமலை - உட்துறைமுக வீதியில் மோட்டார்சைக்கிள் விபத்து

## தாதியர்கள் இருவருக்கு காயம்

(திருமலை நிருபர்)

திருகோணமலை, உட்துறைமுக வீதியில் மோட்டார்சைக்கிள் இரண்டு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் தாதியர் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளதுடன் மற்றுமொருவரும் காயம் அடைந்துள்ளார்.

இவ்விபத்து நேற்று (08) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமைக்காக மோட்டார்சைக்கிளில் வந்து கொண்டிருந்த தாதியர் உத்தியோகத்தரான திருகோணமலை லிங்க நகர் பகுதியைச் சேர்ந்த எஸ்.துஸ்யந்தி (41 வயது) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்தவராவார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்த உவர்மலை, மத்திய வீதியில் வசித்துவரும் எம்.சிவநேசராஷா



(68வயது) என்பவரும் காயம் அடைந்த நிலையில் திருகோமணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்து தொடர்பிலான விசாரணைகளை திருகோணமலை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அட்டாளைச்சேனை பிரதேசத்தில் மாட்டிறைச்சிக்கு புதிய விலை!

## தவிசாளருடனான கலந்துரையாடலில் தீர்மானம்

(திகாமடுல்ல நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச்தில் ஒரு கிலோ மாட்டிறைச்சியை (தனி இறைச்சி) ஆயிரத்து 750 ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபைத் தவிசாளருக்கும் மாட்டிறைச்சிக் கடை உரிமையாளர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்து, இந்த முடிவு எட்டப்பட்டதாக தவிசாளர் ஏ.எல். அமானுல்லாஹ் தெரிவித்தார்.

பிரதேச சபையில நேற்று முன்தினம் (07) மாலை மேற்படி கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதேவேளை, ஒரு கிலோகிராம் - எலும்பு கலந்த இறைச்சி (இறைச்சி 800 கிராம், எலும்பு 200 கிராம்) ஆயிரத்து 550 ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இறைச்சிக் கடைக்காரர்கள் டிஜிட்டல் தராசியை பயன்படுத்த வேண்டும் என்றும் இதன்போது உத்தரவிடப்பட்டது. புதிய விலைப்பட்டியலை ஒவ்வொரு கடையிலும் பிரதேச சபையே காட்சிப்படுத்தும் எனவும் தவிசாளர் கூறினார்.

இந்த நிபந்தனைகளை மீறும் இறைச்சிக் கடைகள் மூடப்படும் எனவும் தவிசாளர் அமானுல்லா மேலும் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# பொலிஸ் உத்தியோகத்தரின் முன்மாதிரியான செயல்!



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற அரச சட்டத்தரணி காரியாலயத்தில் கடமையாற்றும் மட்டக்களப்பு தலைமை பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் சார்ஜன்ட் கிட்னண் குலேந்திரன் மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் அண்மையில் பணப்பை ஒன்றை கண்டெடுத்துள்ளார்.

அதனைபரிசோதித்து பார்த்தபோது 75 ஆயிரத்து 520 ரூபா பணமும் ஏனைய பெறுமதியான ஆவணங்களும் காணப்பட்டுள்ளன. உடனே குறித்த உத்தியோகத்தர் இவ்விடயத்தை அவரது உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்து அவர்கள் முன்னிலையில் குறித்த பணத்தையும் ஆவணங்களையும் உரிய நபரிடம் சேர்த்துள்ளார்.

இவ்வாறான கடினமான சூழ்நிலையிலும் பணத்திற்கு ஆசைப்படாமல் இவ்வாறானதொரு நற்செயலை புரிந்துள்ளார். இலஞ்சம் ஊழல் சம்பந்தப்பட்ட பல உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் இவ்வாறான சில உத்தியோகத்தர்களின் நடத்தை போற்றப்படவேண்டியதென மட்டக்களப்பு புத்திஜீவிகள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

# இந்திய கொன்சியூலர் ஜெனரல் - முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நௌஷாட்டுக்கும் இடையில் சந்திப்பு



(திகாமடுல்ல நிருபர்)

ஹம்பாந்தோட்டையிலுள்ள இந்திய கொன்சியூலர் ஜெனரல் அலுவலகத்தின் கொன்சியூலர் ஜெனரல் டிபின் பி.ஆர். சம்மாந்துறைக்கு நேற்று (08) விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இவ்விஜயத்தின்போது சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எம்.முஹம்மட் நௌஷாட்டை பிரதேச சபை அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது பிரதேசத்தின் கல்வி, கலாசாரம், அபிவிருத்தி மற்றும் சமகால அரசியல் தொடர்பாக கேட்டறிந்து கொண்டதுடன், இலங்கையில் அண்மைய காலமாக நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நிலைமையால் துன்ப சுமைகள் மக்கள் மீது நாளுக்கு நாள் சுமத்தப்பட்டு வருகின்றன.

விலைவாசி உயர்வு காரணமாக மக்கள் சொல்லொணாத் துன்பங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றமை தொடர்பாகவும் எடுத்துக் கூறப்பட்டதுடன், எதிர்காலத்தில் பிரதேசத்தின் கல்வி உள்ளிட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளையும் மேம்படுத்த இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பு அவசியம் தொடர்பாக தவிசாளர் வலியுறுத்தினார்.

# தாந்தாமலை முருகன் ஆலயத்தை நோக்கிய புனித யாத்திரை நாளை

(பாண்டிருப்பு நிருபர்)

மட்டக்களப்பு, கோட்டைக்கல்லாறு புனித தலயாத்திரை ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கிழக்கில் வரலாற்றுப் பிரசித்திபெற்ற தாந்தாமலை முருகன் ஆலயத்தை நோக்கிய 9ஆவது புனித யாத்திரை நாளை (10) புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இப்புனித யாத்திரையில் அடியார்களும் இணைந்துகொள்ளலாம் என கோட்டைக்கல்லாறு புனித தலயாத்திரை ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தாந்தாமலை முருகன் ஆலய தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு வருடாந்தம் கோட்டைக்கல்லாறு, அம்பாறையில் பிள்ளையார், முத்துமாரியம்மன் ஆலய முன்றலிலிருந்து நூற்றுக்கணக்கான பக்த அடியார்கள் பாதயாத்திரை மேற்கொள்வது வழக்கமாகும். இதற்கமைய இம் முறை 10ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு பாதயாத்திரை ஆரம்பமாகின்றது. இவ் யாத்திரை 11ஆம் திகதி காலை தாந்தாமலை முருகன் ஆலயத்தை சென்றடையவுள்ளது.

இந்த யாத்திரையில் இணைந்துகொள்ளும் அடியார்கள் ஆண்கள் காவி நிற வேட்டியுடனும், பெண்கள் மஞ்சள் நிற சேலையுடனும் இணைந்துகொள்தல் அவசியமாகும். இரு தினங்களும் பாதயாத்திரையில் ஈடுபடும் அடியார்களுக்கு அன்னதானம், தாகசாந்தி போன்றவற்றை வழங்க விரும்புபவர்கள் யாத்திரைக்குழுவினரோடு தொடர்பு கொள்ளலாம்.

குறித்த பாதயாத்திரை குழுவினர் கோட்டைக்கல்லாறு, ஒந்தாச்சிமடம், ஈஸ்டன் தோட்டம், களுவாஞ்சிக்குடி, பட்டிருப்பு சந்தி, பெரியபோரதீவு, கோயில் போரதீவு, புன்னக்குளம், தும்பங்கேணி, நிலக்கோட்டை, 40ஆம் கட்டை, செல்வாபுரம்,வாழைக்காலை ஆகிய இடங்கள் ஊடாக 11ஆம் திகதி தாந்தாமலை முருகன் ஆலயத்தை சென்றடையும். பாதயாத்திரையில் இணைய விரும்பும் அடியார்கள் 0770846712, 0779898006 ஆகிய இலக்கங்களோடு தொடர்புகொள்ளவும்.

# ஊடகவியலாளர் ஸாகிருக்கு "சிறந்த ஊடகவியலாளர்" விருது



(சாய்ந்தமருது நிருபர்)

கிழக்கு இளைஞர் அமைப்பின் 4ஆவது ஆண்டு மாநாடு சாய்ந்தமருது பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது, ஊடகத்துறையில் தன்னலம் பாராது சிறந்த முறையில் பணியாற்றிவரும் ஊடகவியலாளருக்கான விருது வழங்கல் நிகழ்வும் இடம்பெற்றது.

இதன்போது, இவ்வருடத்தின் (2022) "சிறந்த ஊடகவியலாளர்'' விருதை மெட்ரோ லீடர் பத்திரிகையின் முன்னாள் செய்தி ஆசிரியரும், ஊடகவியலாளரும், பல்துறைக் கலைஞருமான எம்.எஸ்.எம்.ஸாகிர் பெற்றுக்கொண்டார்.

# ஆயித்தியமலை தூய சதாசகாய அன்னை திருத்தல யாத்திரை செப்டெம்பர் 3இல்



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு, ஆயித்தியமலை, தூய சதாசகாய அன்னை திருத்தல யாத்திரை திருவிழா 2022 தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று நேற்று (08) மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி யோசப் பொன்னையா ஆண்டகை உள்ளிட்ட குறித்த ஆலயத்தின் பங்குத்தந்தை உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், பாதுகாப்புப் பிரிவினர் உள்ளிட்ட மேலும் பலர் இதன்போது கலந்துகொண்டிருந்ததுடன், எதிர்வரும் 26ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி செப்டெம்பர் மாதம்



03ஆம் திகதி பாதயாத்திரை இடம்பெற்று, 04ஆம் திகதி திருவிழா காணவுள்ள ஆயித்தியமலை தூய சதாசகாய அன்னையின் திருத்தல வருடாந்த திருவிழாவின் விசேட ஏற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் இடம்பெற்ற மாபெரும் இரத்த தான நிகழ்வு



(அட்டாளைச்சேனை நிருபர்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை இரத்த வங்கிக்கு அன்பளிப்புச் செய்யும் நோக்கில், அட்டாளைச்சேனை அபிவிருத்தி சமூகம் மற்றும் தேசிய சமாதானப் பேரவையுடன் இணைந்து அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட மாபெரும் இரத்ததான முகாம் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் (07) நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் அஸாத் எம்.ஹனிபாவின் வேண்டுகோளுக்கிணங்க, "இளைஞர்களாகிய நாங்கள் இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்து வன்முறை தீவிரவாதத்தை தவிர்ப்போம்" எனும் தொனிப்பொருளில் இரத்தப் பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு மேற்படி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முகாமில் அட்டாளைச்சேனை அபிவிருத்தி சமூக செயலாளர் ஐ.எல்.ஹாசீம், அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏ.சீ.எம்.றிப்கான், பாடசாலை அதிபர் ஏ.சீ.எம்.ஹரீஸ், ஹெல்விடாஸ் நிறுவனத்தின் பயிற்சியாளர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன், வைத்தியசாலையின் இரத்த



வங்கி வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், பிரதிநிதிகள் ஆகியோர் ஒத்துழைப்பு நல்கியதுடன், இதில் ஆண்கள், பெண்கள் என இரத்த கொடையாளர்கள் ஆர்வத்தோடு கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது







ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமியின் 71ஆவது குருபூசை, காரைதீவில் புனித பதியின் மூலகுரு மூர்த்தியாய் ஜீவசமாதி நிலையில் அமர்ந்திருந்து, அருள்பாலிக்கின்ற ஜீவ சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமி ஆலயத்தில் அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது. (படங்கள் - காரைதீவு நிருபர்)

# அம்பாறையில் அடைமழை காரணமாக 500 ஏக்கர் விவசாய நிலங்களுக்கு சேதம்

(நற்பிட்டிமுனை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த காலங்களில் பெய்த அடைமழை காரணமாக கல்முனை கமநலசேவை பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் அறுவடைக்குத் தயாராகவிருந்த சுமார் 500 ஏக்கர் விவசாயக் காணிகள் பாதிப்புற்றுள்ளதாக விவசாய அமைப்புகள் தெரிவிக்கின்றன.

பண்டித்தீவு கிழல்கண்டம், மேல் கண்டம், இறைவெளிக்கண்டம் கல்முனை வெளிக்கண்டம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாய நிலங்களே இவ்வாறு சேதங்களுக்குள்ளாகியுள்ளன.

மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் இவ்வாறு சேதம் ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகள் தமக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டுமெனக் கோரியுள்ளனர்.

கல்முனை கமநலசேவை அலுவலகத்தால் பாதிப்பு விபரங்கள் தற்போது திரட்டப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு - கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்

## நாவிதன்வெளியில் ஏழாம் நாள் போராட்டம்








(பாறுக் ஷிஹான்)

"வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" எனும் தொனிப்பொருளிலான 100 நாட்கள் செயல்முனைவின் 7ஆம் நாள் போராட்டம், அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட 4 ஆம் கிராமத்திலுள்ள மாவடி சித்தி விநாயகர் ஆலய முன்றலில நேற்று முன்தினம் (07) ஆரம்பமானது.

பின்னர் ஊர்வலமாக சென்று பல்வேறு கோஷங்களுடன் மக்கள் தத்தமது உணர்வுகளை வெளிப்படுத்தி பாதிக்கப்பட்டதுடன், வடக்கு, கிழக்கு மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் என ஒன்றுகூடி தங்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர்

இதன்போது வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும், நாங்கள் நாட்டை துண்டாடவோ தனி அரசோ கேட்கவில்லை இலங்கை நாட்டிற்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வைக் கேட்கின்றோம்,

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகார பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும். 13ஆவது திருத்தச் சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப்பரவலாக்கத்திற்கான உரிமையை உறுதிப்படுத்துகின்றது போன்ற கோஷங்களையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பினர்.

இப்போராட்டத்தில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள், சிவில் அமைப்பினர், பெண்கள் அமைப்பினர், செயற்பாட்டாளர்கள் என 200இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

அத்துடன், அடுத்தகட்ட போராட்டமானது அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, திருக்கோவில் உள்ளிட்ட பல இடங்களில் எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'இலத்திரனியல் சாதனங்களுக்கு அடிமையாதலும் உளநலம் பேணலின் முக்கியத்துவமும்'

## பாடசாலை மாணவிகளுக்கு விசேட கருத்தரங்கு




(கந்தளாய் நிருபர்)

இலத்திரனியல் சாதனங்களுக்கு அடிமையாதல் மற்றும் உளநலம் பேணலின் முக்கியத்துவம் சம்பந்தமான விழிப்புணர்வு கருத்தரங்கு தி/கிண்/அல்ஹிரா மு.ம.வி.இல் அண்மையில் இடம்பெற்றது.

கிண்ணியா தள வைத்தியசாலையின் உளநலப் பிரிவினால் நடத்தப்பட்ட இவ்விழிப்புணர்வு கருத்தரங்கு தி/அல்ஹிரா முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் 9ஆம் தர மாணவிகளுக்கு நடத்தப்பட்டது.

பாடசாலை பிரதி அதிபர் எஸ்.எம்.பைரூஸ் தலைமையில் நடைபெற்ற இந்த அமர்வில் கிண்ணியா தள வைத்தியசாலை உளநலப் பிரிவு வைத்தியர் ஏ.கே.எஸ்.நஸ்மி வளவாளராக கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வை வழிகட்டல் ஆலோசனைப் பொறுப்பாளர் ஆசிரியர் ஏ.டபிள்யூ.எம்.கியாஸ் நெறிப்படுத்தினார்.

# ஒரே நாடு ஒரே சட்டம் குறித்து தற்போது பேசுவது உயிரிழந்த பாம்பை உயிர்ப்பிக்க முயல்வது போன்றதே!

## கோட்டாவின் பதவி விலகலுடன் அந்தக் குழுவும் செயலிழந்துவிட்டதாக அதாவுல்லா எம்.பி. தெரிவிப்பு



(நூறுல் ஹுதா உமர்)

"ஒரே நாடு ஒரே சட்டம் குறித்து இப்போது பேசுவது அர்த்தமற்றது. அது உயிரிழந்த பாம்புக்கு புத்துயிர் கொடுக்க முயல்வது போன்றதாகும்.''

- இவ்வாறு தேசிய காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பு தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலகியமையை அடுத்து ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியும் கலைந்து போய்விட்டது. ஒரே நாடு ஒரே சட்டம் தொடர்பாக அவர்களுடன் நேருக்கு நேர் மிக கடுமையாக முரண்பட்டுக்கொண்டு வெளியேறியவன் நான் என்பதை இத்தருணத்தில் நினைவுபடுத்துகின்றேன்.

ஒரே நாடு ஒரே சட்டம் என்று நீங்கள் சொல்வது என்ன? என்று பல நூற்றுகணக் கானோர் திரண்டிருந்த உயரிய சபையில் வைத்து கோட்டாபய ராஜபக்ஷவை நான் வினவினேன். அவருக்கு அதை பற்றி எதுவுமே தெரியாது என்றும் அதை அவர் அறிந்து கொள்வதற்காகவேதான் செயலணி அமைத்து இருக்கின்றார் என்றும் எனக்கு கோட்டாபய ராஜபக்ஷ பதில் தந்தார்.

எனவேதான் அவர் பதவி விலகியதும், அந்த செயலணியும் இறந்துவிட்டது. செயல் இழந்துவிட்டது. சிலர் அதைப் பற்றி இப்போது பேசுவது நகைச்சுவையாக, கோமாளித்தனமாக தெரிகின்றது. ஒரே நாடு ஒரே சட்டம் குறித்து தற்போது பேசுவது அர்த்தமற்றது. செத்த பாம்புக்கு புத்துயிர் கொடுக்க முயல்வது போன்றது என்றே கருதுகிறேன் - என்று தெரிவித்துள்ளார்.

# உரிமைகளுக்காக போராடியவர்களை கைதுசெய்வது நாட்டின் எதிர்காலத்தை பாதிக்கும்

## ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி கண்டனம்



(மாளிகைகாடு நிருபர்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட அரகல போராட்டக்காரர்களை விடுதலைசெய்ய ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் - என ஸ்ரீ லங்கா ஜனநாயக கட்சி வேண்டுகோளொன்றை விடுத்துள்ளது.

ஸ்ரீ லங்கா ஜனநாயக கட்சியின் தலைவர் கலாநிதி அன்வர் முஸ்தபாவினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இந்தக் கைதானது ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றாகவும் பழிவாங்கும் செயற்பாடாகவுமே அமைந்துள்ளது. இவ்வாறான அடக்குமுறைகளை ஸ்ரீ லங்கா ஜனநாயக கட்சி வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ள அவர், இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு நாட்டில் தமது உரிமைகளை, தேவைகளை கேட்டும் மற்றும் போராடியும் பல தொழிற்சங்கங்கள் கடந்த காலங்களில் பெற்றுள்ளன. அவ்வாறான ஒரு போராட்டத்தையே முன்னிறுத்தி காலிமுகத்திடல் போராட்டக்காரர்களும், இலங்கை ஆசிரியர் சங்கத்தினரும் கடந்த ஓரிரு மாதங்களாக மேற்கொண்டிருந்தனர்.

அதிகார இரும்புக்கரங்களைக்கொண்டு அடக்குமுறைகளில் ஈடுபடுவதிலிருந்து விடுபடுவதன் ஊடாகவும் நாட்டு மக்களின் நம்பிக்கையுடன் கூடிய முன்னேற்றகர செயற்பாடுகளினூடாக நாட்டின் இன்றைய வீழ்ச்சி நிலையிலிருந்து மக்களை காப்பாற்ற முடியும் எனவும், வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக நாடான எமது இலங்கை தேசத்தில் மனிதாபிமானத்தையும், உச்சகட்ட ஜனநாயக மரபுகளையும் சீராக பேணுவதன் மூலமே உதவ எண்ணம் கொண்டுள்ள சர்வதேச நாடுகளினதும், சர்வதேச அமைப்புகளினதும் ஒத்துழைப்பையும் உதவிகளையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

இதேநேரத்தில் போராட்டத்தின் பாதையை மாற்றி பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவிப்பது, அரச காரியாலயங்கள், அரச நிறுவனங்களுக்குள் அத்துமீறி நுழைவது ஜனநாயக போராட்டங்களுக்கு அழகல்ல. குறிக்கோளின் வரம்புகளை மீறி போராட்டக்காரர்கள் செயற்படுவது இலங்கை தேசத்தின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும். ஜனநாயக வழியில் நாட்டின் நலனை முன்னிறுத்தி போராடுவதே சிறந்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சேவை நலன் பாராட்டும் வரவேற்பு வைபவமும்




(மீராவோடை நிருபர்)

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட செம்மண்ணோடை பிரதேசத்தில் எட்டு வருடங்கள் கிராம உத்தியோகத்தராக சேவை புரிந்த எம்.எம்.அன்வர் சதாத்தை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும், குறித்த பகுதிக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் எச்.எம்.அமானுல்லாஹ்வை வரவேற்கும் நிகழ்வும் அண்மையில் மீராவோடை தாருஸ்ஸலாம் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

செம்மண்ணோடை பள்ளிவாசல்கள் மற்றும் சமூக நிறுவனங்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் எம்.ரீ.அப்துல் ரகுமான் அஸ்ஹரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அதிதிகளாக ஒன்றியத்தின் முன்னாள் தலைவரும் கலாசார உத்தியோகத்தருமான ஏ.எல்.பீர் முகம்மத் காஸிமி, ஒன்றியத்தின் ஆலோசகரும் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான எம்.ரீ.எம்.றிஸ்வி மஜீதி மற்றும் சமூக அமைப்புகளின் நிர்வாகத்தினர், புத்திஜீவிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ரெண்டு கறுப்பாடுகள் இருக்காம் எண்டு ரெலோ கட்சித் தலைவர் செல்வம் எம்.பி. புளட் மாநாட்டில சொல்லிப்போட்டாரு எலுவா?**

**அப்ப ஜனாதிபதி தெரிவில ஐந்து கறுப்பாடுகள் ரணிலுக்கு வாக்களித்த சங்கதில ஒரு கறுப்பாடு நீங்களும் உங்கட ரெலோ கட்சி மற்ற ரெண்டுபேரும் சேர்ந்து மூன்றுபேரும் சுவராம் எண்டும் ஒரு கத உலாவுது எலுவா?அது உண்மையா செல்வம் எம்.பி.**

**ஒள்ளுப்பம் அதயும் சொல்லுங்கவன்!**

# கிழக்குப் பல்கலையின் இந்துக் கலைக்கூட அருங்காட்சியக திறப்பு விழா நாளை



(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வந்தாறுமூலையில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீட இந்து நாகரீகத்துறையில் இந்துக் கலைகூடம் மற்றும் அருங்காட்சியகம் ஆகியவற்றின் திறப்பு விழா நாளைய தினம் (10) இடம் பெறவுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் தலைமையிலும், இந்து நாகரீகத்துறைத் தலைவர் கலாநிதி வ.குணபாலசிங்கம் துணைத்தலைமையிலும், யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன், கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் மா.செல்வராசா, பேராசிரியர் சி.மௌனகுரு ஆகியோர் முன்னிலையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்தியத்துணைத்தூதுவர் திபின் பீ.ஆரும், விசேட அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரனும், சிறப்பு அதிதியாக கலை, கலாசார பீடாதிபதி பேராசிரியர் ஜீ.கென்னடியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# மட்டக்களப்பு கொக்குவில் பகுதியில் சந்தைத் தொகுதி நிர்மாணிக்க நடவடிக்கை




(கல்லடி நிருபர்)

உலக வங்கியின் நிதியுதவியில் மட்டக்களப்பு மாநகரசபையினால் நிர்மாணிக்கப்படவுள்ள கொக்குவில் பொதுச் சந்தையின் இறைச்சி மற்றும் மீன் விற்பனைத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் மட்டக்களப்பு மாநகர சபையின் மூன்றாம் வட்டார உறுப்பினர் க.ரகுநாதன் தலைமையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாநகர சபையானது உலக வங்கியின் உளளூர் அபிவிருத்தி உதவிச் செயற்றிட்டத்தின் ஊடாக சுமார் 5 மில்லியன் ரூபா செலவில் நவீனமயப்படுத்தப்பட்ட வகையில் கொக்குவில் பொதுச் சந்தைக்கான இறைச்சி மற்றும் மீன் விற்பனைத் தொகுதியை உள்ளடக்கிய கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்படவுள்ளது.

உள்ளூர் வியாபாரிகளினதும், நுகர்வோரினதும் நன்மை கருதி நிர்மாணிக்கப்படவுள்ள மேற்படி விற்பனைத் தொகுதிக்கான அடிக்கல், நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவனால் நடப்பட்டது.

இந்நிகழ்வின் விசேட அதிதியாக மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் நா.மதிவண்ணனும், சிறப்பு அதிதிகளாக மாநகர சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தனர்.

பொதுமக்களின் நலன்கருதி அவர்கள் பொருட்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் நோக்குடனும், வியாபாரிகள் தமது பொருட்களை பாதுகாப்பாக விற்பனை செய்யும் வகையிலும் குறித்த சந்தைக் கட்டடத் தொகுதி அமைக்கப்படவுள்ளதாக மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவன் இதன்போது தெரிவித்தார்.

# கொரோனா தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த கடுமையான சுகாதார வழிமுறைகள் அவசியம்

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்து

(ஜூட் சமந்த)

கொரோனா தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதன் காரணமாக நிகழ்வுகள், வைபவங்களின்போது கடுமையான சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றுமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

கொவிட் தொற்றுநோய் பரவுகின்றமை தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்திய அச்சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொரோனா தொற்றினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன், உயிரிழப்பு வீதமும் உயர்வடைந்துள்ளது.



நாட்டில் கடந்த காலங்களைபோல் பி.சீ.ஆர். பரிசோதனைகள் நடத்தப்படுவதில்லை. அதனால் நோய்த்தொற்று பதிவாகவில்லை என்று கூற முடியாது. நாம் கணித்துள்ளதைவிட நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படலாம் என நாம் நம்புகிறோம். இந்த நிலை மிகவும் ஆபத்தானதாகும்.

கொரோனா சிகிச்சை மத்திய நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. வைத்தியசாலைகளிலும் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இந்த நிலைமையை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

கொரோனா நோய்க்கான அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் உடனடியாக வைத்திய சாலையை நாடவேண்டும். அத்துடன், பிரதேசத்துக்குப் பொறுப்பான பொதுச் சுகாதார அதிகாரியிடம் தெரிவித்து வீட்டிலுள்ளவர்கள் ஆகக்குறைந்தது ஏழு நாட்களுக்கேனும் தங்களை தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

பொதுமக்கள் பாதுகாப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளாத பட்சத்தில் நாம் முன்னர் எதிர்கொண்டதைபோன்று ஆபத்தான நிலைமை உருவாகும் வாய்ப்புண்டு - என்றார்.

# ஆயுதங்களுடன் இருவர் எம்பிலிபிட்டியவில் கைது

(பலாங்கொடை செய்தியாளர்)

எம்பிலிபிட்டிய மோதரவான வல்லூறுமட பிரதேசத்தில் ஆயுதங்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் உடவளவ விசேட அதிரடிப்படை



முகாம் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதிகாரிகளுக்கு கிடைத்த தகவல்களையடுத்து இச்சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன். இவர்களிடமிருந்து ஒரு ரி-56 ரக துப்பாக்கி, ஒரு மெகசின் துப்பாக்கி உட்பட துப்பாக்கி தோட்டாக்கள் பலவும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் மோதரவான மற்றும் பின்னவல பிரதேசங்களில் வசிப்பவர்கள் எனவும் இவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக மீட்கப்பட்ட பொருட்களுடன் எம்பிலிபிட்டிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# நாவுல வீடொன்றில் தீ விபத்து; பெண்ணொருவர் உயிரிழப்பு

(கண்டி நிருபர்)

நாவுல பிரதேசத்தில் இடம்பெற்ற தீ விபத்தொன்றில் 35 வயது பெண் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நாவுல, பிலிஹுடுகொல்ல என்ற இடத்தில் வீடொன்றில் ஏற்பட்ட மேற்படி தீ விபத்திற்கு மின் ஒழுக்கு காரணமாக இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.



தீ விபத்தில் காயமடைந்த 35 வயதான பெண் மாத்தளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதுடன் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் நாவுல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முச்சக்கரவண்டி – மோட்டார்சைக்கிள் நேருக்கு நேர் மோதி புத்தளத்தில் விபத்து

## ஒருவர் உயிரிழப்பு; இருவருக்கு காயம்

(ஜூட் சமந்த)

சிலாபத்தில் முச்சக்கரவண்டியும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன்ா இருவர் காயங்களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபம் - கொழும்பு பிரதான வீதியில் பண்டாரவத்த என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மஹவெவ புஞ்சிகங்கொட என்ற இடத்தைச் சேர்ந்த 38 வயதான முச்சக்கர வண்டியின் சாரதியே இவ்விபத்தில் பலியாகியுள்ளார்.

மாதம்பை தனியவல்லவைச் சேர்ந்த ரஞ்சித் பத்மலால் (வயது 35) என்பவரும் கட்டுனேரிய, தல்கஹகட்டுவவைச் சேர்ந்த மதுசங்க அப்புஹாமி (வயது 29) என்பவரும் காயமடைந்து சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



இச்சம்பவம் தொடர்பில் சிலாபம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ‘மறைந்தும் மறையாத மாமனிதர்கள்’ நினைவேந்தல் நிகழ்வு





















(கண்டி நிருபர்)

கண்டி மலையக கலை, கலாசார (இரத்தின தீபம்) சங்கத்தின் ஏற்பாட்டில் “மறைந்தும் மறையாத மாமனிதர்கள்” என்ற தலைப்பிலான இந்திய தலித் மக்களின் பெருந்தலைவரும், இந்திய அரசியல் சட்டத்தை வகுத்தவரும், சட்ட அறிஞருமான கலாநிதி அம்பேத்கார், இலங்கை தேசிய தலைவர்களின் ஒருவரான ரி.பி.ஜாயா, இலங்கை திரைப்பட நடிகை ருக்மணிதேவி (டேசி டேனியல் ராசம்மா) ஆகியோருக்கான நினைவேந்தல் நிகழ்வு கண்டி கெப்பிட்டிப்பொல ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் உபுல் திசாநாயக்கவும், சிறப்பு விருந்தினராக கண்டி முத்தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் துரை. மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வை இச்சங்கத்தின் தலைவர் ராஜா ஜென்கின்ஸ் ஏற்பாடு செய்திருந்தார்.



# உலக செய்திகள்

## தொடரும் போர்ப் பதற்றம்

# தாய்வானை ஒட்டிய கடற்பகுதியில் நீடிக்கும் சீனப் போர் ஒத்திகைகள்

தாய்வானை ஒட்டிய கடற்பகுதியில் சீனாவின் போர் ஒத்திகைகள் நான்காவது நாளாக நீடித்ததால் பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், சீனாவின் நடவடிக்கைகளுக்கு தேவைப்பட்டால் பதிலடி தரவும் தயாராகவுள்ளதாக தாய்வான் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

தொலைதூர வான் மற்றும் நிலம் வழித்தாக்குதல் பயிற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக சீன இராணுவம் தெரிவித்துள்ளது. சர்வதேச அளவில் இந்தப் பயிற்சிகளை நிறுத்தும்படி அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் மூலம் சீனாவுக்கு அழுத்தம் அதிகரித்து வருகிறது.

தாய்வான் நீரிணை அருகே சீன விமானங்களும் கப்பல்களும் தங்கள் பிரதேசத்தில் அத்துமீறியதாக தாய்வான் அரசு குற்றஞ்சாட்டியுள்ளது. நிலைமையைக் கண்காணித்து வருவதாக தெரிவித்துள்ள தாய்வான், கப்பல்களையும் விமானங்களையும் தயார் நிலையில் இருக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

தாய்வான் மீது சீனா போர் தொடுத்து அதைக் கைப்பற்றக்கூடும் என தெரிவிக்கப்பட்ட நிலையில், அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி தாய்வானுக்கு சென்று அந்நாட்டு ஜனாதிபதியைச் சந்தித்தார்.

சீனாவின் கடும் எதிர்ப்பை மீறி நான்சி தாய்வானுக்கு சென்றதையடுத்து அந்நாட்டைச் சுற்றியுள்ள கடற்பகுதிகளில் சீன போர்க்கப்பல்களும் போர் விமானங்களும் ஒத்திகையில் ஈடுபட்டன. இந்நிலையில், இருநாடுகளுக்கு இடையே அறிவிக்கப்படாத படைவிலக்கப் பகுதியான தாய்வான் நீரிணை நடுக்கோட்டுக்கு அருகே இரு நாடுகளின் பத்து போர்க்கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

படைவிலக்கப் பகுதிக்கு வந்துள்ள சீனக் கப்பல்களின் நகர்வைக் கண்காணித்து வருவதாக தாய்வான் கடற்படை தெரிவித்துள்ளது.

தாய்வான் கடல் பகுதியில் நடத்திவரும் போர்ப் பயிற்சியை உடனடியாக நிறுத்தும்படி சீன இராணுவத்துக்கு அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

தென்கிழக்கு ஆசிய நாடான தாய்வானை அண்டைநாடான சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. தாய்வானை தன்னுடன் அதிகாரப்பூர்வமாக இணைப்பதற்கான நடவடிக்கைகளை அந்நாடு மேற்கொண்டுள்ளது. தேவைப்பட்டால் தாய்வானை கைப்பற்றுவோம் என்றும் சீனா தெரிவித்துள்ளது. இந்த விவகாரத்தில் தாய்வானுக்கு ஆதரவாக அமெரிக்கா செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**சீனாவுக்கு பதிலடி கொடுக்கத் தயார்**

தாய்வான் பிராந்தியத்தில் போர்ப் பதற்றத்தை தடுக்க சர்வதேச நாடுகள் ஆதரவை வழங்க வேண்டுமென தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து சமூக வலைத்தளத்தில் தெரிவித்த அவர்,


தாய்வான் அரசும், இராணுவமும், சீனாவின் இராணுவப் பயிற்சிகள் மற்றும் போர் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக தெரிவித்தார்.

மேலும், சீனாவின் நடவடிக்கைகளுக்கு தேவைப்பட்டால், பதிலடி தரவும் தயாராகவுள்ளதாக தாய்வான் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

**போருக்குத் தயார்**

தாய்வான் - சீனாவை பிரிக்கும் தாய்வான் நீரிணையில் சீன போர் விமானங்கள், கப்பல்கள், ட்ரோன் எனப்படும் ஆளில்லா சிறிய ரக விமானங்கள் பறப்பதாக தாய்வான் அரசு தெரிவித்துள்ளது. ஒருவேளை போர் மூளும் அபாயம் ஏற்பட்டால், அதை சமாளிக்கவும் தாய்வான் இராணுவம் தயாராகி வருவதாக, அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தாய்வானின் தெற்கு பிங்டன் என்ற இடத்தில் ஆயுதப் பயிற்சியில் வீரர்கள் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது.

சீனாவின் போர்ப் பயிற்சி நடவடிக்கையை கூர்ந்து கவனித்து வருவதாகவும், போர் விமானங்கள், கப்பல்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தாய்வான் இராணுவ அமைச்சு தெரிவித்துள்ளது.





# கொலம்பியா முதல் இடதுசாரி ஜனாதிபதியாக கெஸ்டாவோ பொறுப்பேற்பு



தென் அமெரிக்க நாடான கொலம்பியாவின் முதல் இடதுசாரி ஜனாதிபதியாக கெஸ்டாவோ பெட்ரோ (Gustavo Petro) பொறுப்பேற்றுள்ளார்.

எம்-19 கொரில்லா படையின் முன்னாள் உறுப்பினரான அவர், கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சியைத் தோற்கடித்தார். சந்தை சார்பு பொருளாதாரத்தில் முந்தைய ஆட்சியாளர்கள் சிறு சீர்திருத்தங்கள் மேற்கொண்டாலும், அதிகரிக்கும் வறுமை, வன்முறை, மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றால் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சிக்கு எதிரான அலை வீசியது. அதனைப் பயன்படுத்தி, இடதுசாரிக் கொள்கையையுடைய கஸ்டாவோ பெட்ரோ வெற்றிபெற்றார்.

இந்நிலையில், அவர் நாட்டின் புதிய ஜனாதிபதியாக ஞாயிற்றுக்கிழமை பொறுப்பேற்றுக்கொண்டார்.

4 ஆண்டுகளுக்கு அவர் ஜனாதிபதியாக பதவி வகிப்பார்.

# சிலியில் 82 அடி விட்டத்தில் உருவான பெரிய பள்ளம்



சிலியில் திடீரென உருவான 82 அடி விட்டம் கொண்ட பிரம்மாண்ட பள்ளம், பிரான்ஸின் நினைவுச்சின்னமான ஆர்க் டி ட்ரையம்பை விழுங்கும் அளவுக்கு ஒரே வாரத்தில் இரண்டு மடங்கு பெரிதாகியுள்ளது.

இதையடுத்து அருகிலுள்ள செப்புச் சுரங்கத்தில் பணியை நிறுத்துமாறு அதிகாரிகளை அரசு உத்தரவிட்டுள்ளது. அருகில் அமைந்துள்ள அல்காபரோசா சுரங்கத்தின் நுழைவாயிலிலிருந்து வேலைத் தளம் வரையிலான பகுதிகள் மூடப்பட்டன. இந்த ஆழ்துளையின் வான்வழிப் படங்களை சீன ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

# இஸ்ரேல் - பலஸ்தீன் இடையே தற்காலிக போர் நிறுத்தம்



பலஸ்தீனத்தின் மேற்கு கரைப்பகுதியான காஸாவில் கடந்த மூன்று நாட்களுக்கும் மேலாக இஸ்ரேல் தாக்குதல் நடந்த நிலையில், எகிப்து தலையிட்டு மத்தியஸ்தம் செய்ததன் பின்னர் இருநாடுகளுக்கிடையே தற்காலிக போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இஸ்ரேல் வெள்ளிக்கிழமைமுதல் காஸா முழுவதும் கடுமையான தாக்குதல் நடத்தியது. இஸ்ரேலின் தாக்குதலில் கட்டடங்கள் பல தரைமட்டமாகின. மேலும், பலஸ்தீனத்தின் அகதிகளின் முகாம்களும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளன.

பலஸ்தீன இஸ்லாமிய ஜிகாத் குழுவை குறிவைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்தது. ஆனால், இதில் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் பலஸ்தீன பொதுமக்கள். பொதுமக்களின் உயிரிழப்புக்கு இஸ்ரேல் தரப்பில் எந்த விளக்கமும் இதுவரை அளிக்கப்படவில்லை.

இஸ்ரேலின் தாக்குதலில் பச்சிளம் பலஸ்தீன குழந்தைகள் 15 பேர் உட்பட 44 பேர் உயிரிழந்துள்ளதுடன், 350இற்கும் மேற்பட்ட சிவிலியன்கள் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த ஆண்டு காஸா பகுதியில் இஸ்ரேல் - ஹமாஸ் இடையே 11 நாட்கள் நடத்த போரைவிட கோரமான மோதலாக இது அமைந்திருக்கிறது.

இந்தச் சூழலில் இரு தரப்புக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுவதற்கு எகிப்து மத்தியஸ்தம் செய்தது. இதன் விளைவாக இஸ்ரேலுக்கும் பலஸ்தீன இஸ்லாமிய ஜிகாத் குழுவுக்கும் இடையே கடந்த மூன்று நாட்களாக நடந்த மோதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

போர் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து மீட்புப் பணிகளில் பலஸ்தீனம் அரசு தீவிரமாக இறங்கியுள்ளது.

# ஆளுநருடன் அரசியல் பேசினேன்; ஆனால் அதுபற்றி சொல்ல முடியாது



*(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது )*

''தமிழக ஆளுநருடன் அரசியல் பற்றி பேசினேன், ஆனால், அதைப் பற்றி இப்போது சொல்ல முடியாது''- என நடிகர் ரஜினிகாந்த் தெரிவித்துள்ளார்.

சென்னை ஆளுநர் மாளிகைக்கு திங்கட்கிழமை காலை சென்ற நடிகர் ரஜினிகாந்த், தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியை நேரில் சந்தித்துப் பேசினார். இதனையடுத்து செய்தியாளர்களை சந்தித்த ரஜினிகாந்த், ஆளுநருடனான சந்திப்பு குறித்து விளக்கமளித்தார்.

இதுதொடர்பில் அவர் தெரிவிக்கையில், இது மரியாதை நிமித்தமான சந்திப்பு. தமிழக ஆளுநருடன் 30 நிமிடம் பேசிக் கொண்டிருந்தேன். ஆளுநருடன் அரசியல் பற்றி பேசினேன். ஆனால், அதைப் பற்றி இப்போது சொல்ல முடியாது - என்றார்.

மீண்டும் அரசியலுக்கு வரப்போகிறீர்களா? என்று செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு, மீண்டும் அரசியலுக்கு வரப்போவதில்லை என்று நடிகர் ரஜினி பதிலளித்தார்.

தொடர்ந்து பேசிய ரஜினி, "காஷ்மீரில் பிறந்து, அதிக காலம் வட இந்தியாவில் வளர்ந்தவர் ஆளுநர் ரவி. தற்போது தமிழகத்தில் இருக்கும் ஆன்மிக உணர்வு அவரை வெகுவாகக் கவர்ந்துள்ளது. தமிழர்களின் கடின உழைப்பு, நேர்மை போன்றவை மிகவும் பிடித்திருப்பதாக அவர் கூறினார். தமிழகத்தின் நன்மைக்காக - நலனுக்காக தான் என்ன செய்யவும் தயார் என்று அவர் என்னிடம் கூறினார்" என்று ரஜினி குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற தேர்தல் பற்றி விவாதித்தீர்களா என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, அது குறித்து சொல்ல முடியாது என்று ரஜினி பதிலளித்தார். 'ஜெயிலர்' படப்பிடிப்பு ஓகஸ்ட் 15 அல்லது 25ஆம் திகதி தொடங்கும் எனவும் இதன்போது ரஜினி தெரிவித்துள்ளார்.

# ரோஹிங்கியா அகதிகளை திருப்பியனுப்ப உதவுமாறு சீனாவிடம் பங்களாதேஷ் கோரிக்கை

தங்களிடம் தஞ்சமடைந்துள்ள ரோஹிங்கியா அகதிகளை மியன்மாருக்கு திருப்பியனுப்புவதற்கு சீனா உதவ வேண்டும் என்று பங்களாதேஷ் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யீ, தலைநகர் டாக்காவில் பிரதமர் ஷேக் ஹசீனாவையும் வெளியுறவுத் துறை அமைச்சர் ஏ.கே.அப்துல் மோமனையும் சந்தித்துப் பேசினார்.

அப்போது, பங்களாதேஷ் அகதிகள் முகாமில் தங்கியுள்ள ரோஹிங்கியாக்களை மியன்மாருக்கு திருப்பியனுப்புவதற்கான நடவடிக்கையில் சீனா ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று வாங் யீயிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மியன்மாரில் சிறுபான்மை முஸ்லிம் இனத்தவரான ரோஹிங்கியாக்கள், வன்முறைக்கு அஞ்சி அண்டை நாடான பங்களாதேஷில் தஞ்சமடைந்துள்ளனர்.

கடந்த 2015ஆம் ஆண்டிலிருந்து மட்டும் 9 இலட்சத்துக்கும் மேற்பட்ட ரோஹிங்கியாக்கள் பங்களாதேஷுக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், சுமார் 7 இலட்சம் அகதிகளை திரும்பப் பெறுவதற்கான ஒப்பந்தத்தை மியன்மார் அரசு பங்களாதேஷுடன் கடந்த 2017ஆம் ஆண்டு மேற்கொண்டது. இதற்கு, மியன்மாரிடம் தனக்கு இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி சீனா உதவியது.

எனினும், வன்முறைக்குப் பயந்து மியன்மார் திரும்பிச் செல்ல ஏராளமான ரோஹிங்கியா அகதிகள் மறுத்து வருகின்றனர்.

இந்தச் சூழலில், அகதிகளை மியன்மாருக்கு திருப்பி அனுப்புவதற்கு சீனா உதவவேண்டும் என்று பங்களாதேஷ் தற்போது வேண்டுகோள் விடுத்துள்ளது.

# உக்ரைன் ஆயுதக்கிடங்கு மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்

**நேட்டோ வழங்கிய 45,000 தொன் வெடிமருந்துகள் அழிப்பு**



உக்ரைனுக்கு நேட்டோ அமைப்பால் வழங்கப்பட்ட 45,000 தொன் வெடி மருந்தை ஏவுகணை வீசி அழித்ததாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

மிகோலைவ் நகரிலுள்ள அந்த ஆயுதக் கிடங்கு மற்றும் டோனட்ஸ்க் பகுதிகளிலுள்ள உக்ரைன் நிலைகள் மீது ரஷ்யப் படைகள் ஏவுகணைத் தாக்குதல் நிகழ்த்தின.

போர் ஆரம்பித்ததுமுதல், உக்ரைன் படைகளுக்குச் சொந்தமான 263 போர் விமானங்கள், 4,000இற்கும் மேற்பட்ட பீரங்கிகள், 3,000இற்கும் மேற்பட்ட சிறிய ரக பீரங்கிகளை தகர்த்துள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

# Commonwealth Games - 2022

## கிரிக்கெட்டின் தங்கம் அவுஸ்திரேலியாவுக்கு!




பொதுநலவாய விளையாட்டு விழா வரலாற்றில் முதல் முறையாக நடைபெற்ற மகளிர் இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடர் இறுதிப் போட்டியில் 9 ஓட்டங்களால் இந்திய அணியை வீழ்த்திய அவுஸ்திரேலிய மகளிர் அணி தங்கப் பதக்கத்தை சுவீகரிக்க, இந்திய மகளிர் அணி வெள்ளிப் பதக்கத்தை வென்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி, 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை பறிகொடுத்து 161 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் 162 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு ஆடிய இந்திய அணி 19.3 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்து 152 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து தோல்வியைத் தழுவியது.

இதேவேளை, வெண்கலப் பதக்கத்திற்காக நடைபெற்ற போட்டியில் இங்கிலாந்து மகளிர் அணியை 8 விக்கெட்டுகளால் வீழ்த்திய நியூசிலாந்து, தொடரில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றது.

## பத்து இலங்கையர்கள் இங்கிலாந்தில் தலைமறைவு



பொதுநலவாய விளையாட்டு விழாவுக்காக இலங்கையிலிருந்து பங்கேற்க சென்றவர்களில் மொத்தமாக 10 பேர் தலைமறைவாகியுள்ளதாக இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமிலுள்ள இலங்கை பொதுநலவாய விளையாட்டுத்துறை குழாத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.


ஒரு அதிகாரியும் 9 வீரர்களும் தலைமறைவாகியுள்ளதாக பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக ஏ.எவ்.பியில் செய்தி வெளியாகியுள்ளது. இது தொடர்பாக பொலிஸாரிடம் இலங்கை அதிகாரிகள் முறையிட்டுள்ளனர்.

தலைமறைவானவர்களில் மூவர் இருக்கும் இடத்தைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். எனினும், அவர்களுக்கு 6 மாத கால விசா இருப்பதால் சட்டத்தை சுட்டிக்காட்டி பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என அந்த அதிகாரி குறிப்பிட்டார். இங்கிலாந்துக்கு வருகை தந்த இலங்கை குழாத்தினரின் கடவுச்சீட்டுகளை இலங்கை குழாத்தின் அதிகாரி பொறுப்பேற்றுள்ளார். அவர்கள் அனைவரும் நாடு திரும்ப வேண்டும் என்பதை உறுதிசெய்யவே கடவுச்சீட்டுகள் பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

எனினும், சிலர் தலைமறைவாவதை அந்த நடவடிக்கையால் தடுக்க முடியாமல் போனது. தலைமறைவானவர்களில் ஜூடோ அணியின் முகாமையாளரும் ஜூடோ சம்மேளனத் தலைவருமான அசேல டி சில்வா, ஜூடோ வீராங்கனை சமிலா டிலானி, மல்யுத்த வீரர் ஷனித் சத்துரங்க, குத்துச்சண்டை வீரர் விற்றாலி நிக்லஸ், கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றிய ஷஷிமல் மலிந்த, அஷேன் ரஸ்மிக்க ஆகிய 6 பெயர்களை அதிகாரிகள் முன்னர் வெளியிட்டிருந்தனர்.

மற்றைய நால்வரின் பெயர்களை அவர்கள் வெளியிட மறுத்துவிட்டனர். எனினும், குத்துச்சண்டை மற்றும் மல்யுத்தம் ஆகிய விளையாட்டு வீரர்கள் அந்த நால்வர் எனத் தெரியவருகிறது.

## ஈட்டி எறிதலில் பதக்கத்தை இழந்த இலங்கை




ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் பங்கேற்ற சுமேத ரணசிங்க இறுதிப்போட்டியில் 10ஆவது இடத்துடன் (13 பேரில்) தொடரை நிறைவுசெய்து கொண்டார். இவருக்குக் கிடைத்த மூன்று வாய்ப்புகளில் அதிகமாக 70.77 மீற்றர் வீசியிருந்த நிலையில், 10ஆவது இடத்தைப் பிடித்துக்கொண்டார்.

இந்தப் போட்டியில் பாகிஸ்தான் வீரர் அர்ஷாட் நதீம் பொதுநலவாய போட்டி சாதனை மற்றும் தன்னுடைய தனிநபர் சிறந்த பிரதியை பதிவுசெய்து 90.18 மீற்றர் தூரம் வீசி தங்கப்பதக்கத்தை வென்றதுடன், கிரேனேடாவின் அண்டர்சன் பீட்டர்ஸ் வெள்ளிப்பதக்கத்தையும் (88.64), கென்யாவின் ஜூலியஸ் யேகோ வெண்கலப்பதக்கத்தையும் (85.70), வென்றனர்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com



## பதக்க வாய்ப்பை இழந்த சாரங்கி

பெண்களுக்கான நீளம் பாய்தல் இறுதிப்போட்டியில் பங்கேற்ற இலங்கை வீராங்கனை சாரங்கி சில்வா, ஒட்டுமொத்த அடிப்படையில் 13ஆவது இடத்தை (இறுதி) பிடித்து பதக்கம் வெறும் வாய்ப்பை இழந்தார். தகுதிச்சுற்றுப் போட்டியில் இவர் 6.42 மீற்றர் தூரம் பாய்ந்திருந்தபோதும், இலங்கை நேரப்படி நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இறுதிப்போட்டியில் 6.17 மீற்றர் தூரம் பாய்ந்திருந்த நிலையில், 13ஆவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டார்.

இந்தப் போட்டியில் பொதுநலவாய போட்டி சாதனையை பதிவுசெய்த நைஜீரிய வீராங்கனை ஈசா புரூம் 7 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கம் வென்றதுடன், அவுஸ்திரேலிய வீராங்கனை புரூக் புஸ்சுக்கேல் 6.95 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தையும், கானாவின் டெபோராஹ் அகுவா 6.94 மீற்றர் பாய்ந்து வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

## இந்தியாவின் சுழலில் சரணடைந்த ஒட்டுமொத்த மே.இ. தீவுகள்

## வரலாற்றில் இதுவே முதன்முறை




மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான ஐந்தாவதும், இறுதியுமான இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில் இந்திய அணி 88 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று, தொடரை 4-1 என கைப்பற்றியது.

சுற்றுலா இந்திய அணிக்கும், மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையிலான முதல் தொடரான ஒருநாள் தொடரை இந்திய அணி கைப்பற்றிய நிலையில், அடுத்த தொடரான 5 போட்டிகள்கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரின் முதல் 4 போட்டிகள் முடிவில் இந்திய அணி 3-1 என தொடரை ஏற்கனவே கைப்பற்றியது.

இந்நிலையில், ஐந்தாவது போட்டி அமெரிக்காவின் புளோரிடாவிலுள்ள லாடர்ஹில் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 188 ஓட்டங்கள் எடுத்தது.

கடின இலக்கை விரட்டிய மேற்கிந்திய தீவுகள் அணி, இந்திய சுழலில் சிதறியது. அக்சர் வலையில் ஹோல்டர் (0), புரூக்ஸ் (13), டேவோன் தாமஸ் (10) சிக்கினர். குல்தீப்பிடம் கேப்டன் பூரன் (3), டிரேக்ஸ் (1), ஓடியன் ஸ்மித் (0) சரணடைந்தனர். தனிநபராக போராடிய ஹெட்மயர் அரைசதம் கடந்தார். பிஷ்னோய் பந்துவீச்சில் பாவெல் (9), கீமோ பால் (0), ஹெட்மயர் (56), மெக்காய் (0) ஆட்டமிழக்க மேற்கிந்திய தீவுகள் அணி 15.4 ஓவரில் 100 ஓட்டங்களுக்கு சுருண்டுபோனது.

இப்படி சுழல் பந்துவீச்சாளர்கள் 10 விக்கெட்டையும் கைப்பற்றுவது இருபதுக்கு 20 சர்வதேச வரலாற்றில் முதல் முறையாக அரங்கேறியது. ஆட்டநாயகன் விருதை அக்சர் படேலும், தொடர் நாயகன் விருதை அர்ஷ்தீப் சிங்கும் வென்றனர்.

## தேசிய ரீதியிலான பளு தூக்கல் போட்டியில் மூன்று புதிய சாதனைகள்

(யாழ். நிருபர்)



தேசிய ரீதியான பளு தூக்கல் போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் புதிய சாதனைகளை படைத்துள்ளார். தேசிய ரீதியில் கடந்த சனிக்கிழமை பண்டாரகம பகுதியில் இடம்பெற்ற போட்டியில் 25 மாவட்டங்களையும் சேர்ந்த 44இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து ஒரே ஒருவராக யாழ்ப்பாணம் தென்மராட்சி பகுதியைச் சேர்ந்த சற்குணராசா பூசாந்தன் கலந்து கொண்டு மூன்று பிரிவுகளில் நடைபெற்ற போட்டியில் மூன்றிலும் வென்று, மூன்று தங்கப்பதக்கங்களை பெற்றுக்கொண்டுள்ளார்.

120 கிலோவிற்கு மேற்பட்டோருக்கான பிரிவில் கலந்துகொண்ட இவர், Squat பிரிவில் 330 கிலோ கிராமையும், Benchpress பிரிவில் 175 கிலோ கிராமையும், Deadlift பிரிவில் 261 கிலோ கிராமையும் தூக்கி வெற்றிபெற்றுள்ளார். இதில் Squat மற்றும் Deadlift பிரிவில் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார். அத்துடன், குறித்த போட்டியில் மொத்தமாக 766 கிலோ கிராமை தூக்கி புதிய சாதனையையும் படைத்துள்ளார்.

## வெறும் மூன்று போட்டிகளிலேயே ஐ.சி.சி. விருது வென்ற பிரபாத்




சர்வதேச கிரிக்கெட் பேரவையின் ஜூலை மாதத்தின் சிறந்த வீரராக இலங்கை அணியின் சுழற்பந்துவீச்சாளர் பிரபாத் ஜயசூரிய தெரிவானார்.

கடந்த ஜூலை மாதம் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் பிரகாசித்தவர்களில் மூன்று வீரர்கள் விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டனர். அதன்படி இங்கிலாந்தின் ஜொனி பெயர்ஸ்டோ, இலங்கையின் பிரபாத் ஜயசூரிய மற்றும் பிரான்ஸின் குஸ்டாவ் மெக்கியோன் ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டனர்.

இவர்களில் இலங்கை வீரர் பிரபாத், ஜூலை மாதத்திற்கான ஐ.சி.சியின் சிறந்த வீரர் விருதை வென்றார். இதன்படி, குறித்த விருதை வென்ற இரண்டாவது இலங்கை வீரர் என்ற பெருமையை பிரபாத் ஜயசூரிய பெற்றார். முன்னதாக மே மாதம் அஞ்சலோ மெத்யூஸ் வென்றார்.

கடந்த மாதம் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமான பிரபாத் தனது முதல் போட்டியில் 12 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனைப் புத்தகத்தில் இணைந்தார். தான் விளையாடிய 3 டெஸ்ட் போட்டிகளில் 29 விக்கெட்டுகளை வீழ்த்தி, இந்த ஆண்டின் அதிக டெஸ்ட் விக்கெட் வீழ்த்தியவர் என்ற சாதனையை படைத்தார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7